விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 30 திங்கட்கிழமை (13.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 115

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த குறுக்கு வழிகள் இல்லை



## நம்பிக்கை உருவாக்குங்கள் என்கிறார் ஐ.நா. அறிக்கையாளர்

(ஜெனிவா)

மனித உரிமை மீறல்கள் நடந்துள்ள இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு குறுக்கு வழிகள் இல்லை. எனவே அரச ஆணைக் குழுக்கள் மீது மக்களுக்கு உள்ள அவநம்பிக்கையை போக்கி முன் உதாரணமாக இலங்கை செயற்பட வேண்டும் என உண்மையை ஊக்குவித்தல், நீதி, நல்லிணக்கத்துக்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி. கிரெய்ப் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
இன்று முதல் உங்கள் வலம்புரியில்
ஜோதிட கலாமணி சிவல்புரிசிங்காரம் எழுதும் மன்மத வருட ராசிபலன் உங்கள் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்.

## எனது குடும்பத்தை சேர்ந்த எவரும் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள்

(கொழும்பு)

தமது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது எனது குடும்ப உறுப்பினர்கள் எவரும் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள்.

எமது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட்டால் பாராளுமன்ற ஆசனம் கிடைக்கும் சாத்தியம் உண்டு என்ற போதிலும் தேர்தலில் குடும்ப உறுப்பினர்கள் போட்டியிட மாட்டார்கள்.

உள்நாட்டு அரசியலில் குடும்ப அரசியலை இல்லாமல் செய்யவே நான் விரும்புகிறேன். பிள்ளைகளோ சகோதரர்களோ தேர் தலில் போட்டியிட மாட்டார்கள் இதன்மூலம் நாங்கள் சிறந்த முன்னுதார ணத்தை

### மைத்திரி சிறந்த முன்னுதாரணம்

வழங்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும்அரச நிறுவனங் களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவ தனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ)

## இலங்கைக்கு ஒபாமா பயணம் செய்ய வாய்ப்பு!

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கைக்கு பயணம் செய்ய வாய்ப்புகள் இருப்பதாக வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள 24ஆம் பக்கம் பார்க்க....



## சுதந்திர கட்சி பிளவுபட ஆரம்பிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மத்திய செயற்குழுவில் இருந்து 04 உறுப்பினர்கள் நீக்கப்பட்டமையினால் கட்சி பிளவுபட ஆரம்பித்துள்ளது என மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். குறித்த உறுப்பினர்களின் நீக்கம் தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு சுட் டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும்பொது தேர்தலில்முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுதந்திர கட்சியின் பிரதம வேட்பாளராக களமிறங்க வேண்டுமென போராடிய 04 உறுப்பினர்களை மத்திய செயற் குழுவில் இருந்து நீக்கிவிட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கையை தம்மால்ஒருபோதும்ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இதனை தாம் வன்மையாககண்டிப்பதாகவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## மே-1 ல் மகிந்த அரசியல் பிரவேசம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது அரசியல் பிரவேசம் சர்வதேச தொழிலாளர் தினமான மே 01-ம் திகதி இடம்பெறுமென அரசியல் வட்டாரங்களில் இருந்து செய்திகள் கசிந்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுவிலிருந்து மூவர் விலகல்

(கொழும்பு)

கடந்த ஐந்து வருடங்களில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் இருந்து மூன்று பேர் விலகியுள்ளனர்.

ஏற்கெனவே இந்தக் குழுவில் உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியாசத் மற்றும் அனில் குணரட்ன ஆகியோர் அங்கம் வகித்தனர். மூன்றாவதாக இளைப்பாறிய கணக்காய்வாளர் 24ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்தவின் சூப்பைவிட நல்லாட்சி கஞ்சி சிறப்பு

## சரத் பொன்சேகா கருத்து

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் பழுதடைந்த சூப் பானையை விட மைத்திரி ரணிலின் கஞ்சிப் பானை சிறந்தது என ஜனநாயகக் கட்சியின் தலைவரான பீல்ட் மார்ஷல் சத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துள்ள பொன்சேகா, கஞ்சி என்பது மருத்துவ குணாதிசயங்களை கொண்டபானம் என்றும் கூறியுள்ளார்.

மகிந்தவின் பழுதான சூப்பை பருகுவதற்கு பதிலாக, கஞ்சி மிகவும் சிறந்தது.

போர் நடைபெற்ற காலத்தில் புலிகளின் வங்கியில் இருந்து மீட்கப்பட்ட 220 கிலோ கிராம் தங்கம் குறித்து இராணுவம் ஆவணங்களில் பதிவு செய்து அதனை அரசாங்கத்திடம் வழங்கியது.

எனினும் தற்போது நாட்டில் இல்லாத முன்னாள் அமைச்சர் ஒருவர் அரசாங்கத்திடம் 110 கிலோ தங்கம் இருப்பதாக கூறியுள்ளார்.

இது குறித்து அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும். அது தொடர்பில் 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அதிபர் சேவைக்கு விண்ணப்பம் கோரல்

கல்வி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை அதிபர் சேவையின் 3ஆம் வகுப்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு கல்வி மற்றும் தொழில்தகைமையாக, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தினால் பெற்றுக்கொண்ட கல்விமாணி பட்டம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பாடத் துறையிலும் பட்டம் அத்துடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா

அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

மேற்படி தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள இலங்கை ஆசிரியர் சேவையில் 5 அல்லது 6 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் இலங்கை அதிபர் சேவையின் 3ஆம் வகுப்பில் ஆட்சேர்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கு உயர்ந்த பட்ச வயது 50 ஆக இருக்க வேண்டும்.

மேற்படி தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் உரிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இது தொடர்பான முழுமையான விபரங்களை கடந்த 10ஆம் திகதி வெளியான வர்த்தமானப் பத்திரிகையில் பார்வையிடலாம்.

மேற்படி போட்டிப் பரீட்சையானது நாட்டிலுள்ள 4431 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)



காலஞ்சென்ற அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரரின் இறுதிச் சடங்குகள் நேற்று இடம்பெற்றன.

ஒரு மணியளவில் அஸ்கிரி மகாவிகாரையிலிருந்து தேரரின் பூதவுடல் வாகன பேரணியாக விளையாட்டரங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. இதுதவிர, வான்படையின் உலங்கு வானூர்திகளின் ஊடாக மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பூரண ராஜ கௌரவத்துடன் அஸ்கிரிய பீடாதிபதியின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நீர் மாசு தொடர்பில் மாத இறுதிக்குள் அறிக்கை

## மிக விரைவில் முடிவு- முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய இடங்களில் உள்ள கிணற்று நீரினை பயன்படுத்துவதற்கான இறுதி அறிக்கையினை இந்த மாத இறுதிக்குள் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சுன்னாகம் கிணறுகளில் கழிவு எண்ணெய் கலக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நீரை மக்கள் பயன்படுத்தக் கூடாதென்றும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள நிலையில், நேற்றுக் காலை யாழ். மாவட்ட செயலகத்தில் சுன்னாகம் கிணற்று நீரைப் பருகுவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில், வட மாகாண ஆளுநர் பள்ளிக்கார மற்றும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.வகனேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் நிபுணர் குழுவினர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே வட மாகாண முதலமைச்சர இவ்வாறு தெரிவித்தார். பலவிதமான மாசுகள் நீரில் காணப்படுகின்றன. அங்கு ஒன்றும் இல்லை எனக் கூற முடியாது, வட மாகாண சபையின் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் ஏனைய நிபுணர் குழுக்களின் கருத்துக்களையும் கேட்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

வட மாகாணத்தில் இருக்கும் நீர் நிலைகளை பயன்படுத்துவது சம்பந்தமாக, எப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வட மாகாண சபையின் நிபுணர் குழு தெரிவிக்க வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியதாக வட மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் சரியான புரிந்துணர்வு இன்மையினாலேயே இருதரப்பினர்களிர்கிடையே இது தொடர்பில குழப்பநிலை காணப்பட்டிருந்தது. எனினும் இன்று (நேற்று) நடைபெற்ற கலந்துரையாடலில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் என பல தரப்பட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். மிகவிரைவில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)


யாழ் ஈழத்து சபரிமலை
கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்



14.04.2015 சித்திரை விஷு சிறப்பு பூஜை பெருவிழா

இருமுடிகட்டி 18ம் படி ஏறுதல், நெய் அபிஷேகம்
புஸ்பா அபிஷேகம் பஜனை நடைபெறும்

நிகழ்ச்சி
காலை 7 மணி கணபதி ஹோமம் தொடர்ந்து அர்ச்சனை
பகல் - 12.20 மணிமுதல் தமிழ் புத்தாண்டு மன்மத வருஷ
அபிஷேகப் பூஜை சுவாமி வீதி வலம் வருதல்
மாலை பெரிய படி பூஜை, மலர் பூஜை பஜனை
6 மணி முதல் 8.30 மணிவரை நடைபெறும்

அனைவரும் வருக; ஐயன் அருள் பெறுக!

குறிப்பு: மருத்து நீர் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இங்ஙனம்
தேவஸ்தான குருசாமி கி.ஹரிகரசுத சிவாச்சாரியார்
0212227688, 0777110624
(074)



துயர் பகிர்கின்றோம்



முத்துவேலு அகிலேஸ்வரன்

எமது பாடசாலையில் கடமையாற்றும்
றஞ்சிதவாணி ஆசிரியையின் மைத்துனர்
முத்துவேலு அகிலேஸ்வரன்
அகால மரணமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், புத்தூர்.
(C-651)


# மகிந்தவுடன் உறவு பாராட்டிய ரணில் மக்களுக்காக எதையும் செய்யவில்லை

## எதிர்க் கட்சித் தலைமையைப் பெற ஜே.வி.பி பிரயத்தனம்

நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வழங்க வேண்டும் என அந்த கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

வாராந்த பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

எதிர்க் கட்சித் தலைவர் பதவி எமது கட்சியின் தலைவர் தோழர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கே உரித்தானது.

ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் அமைதியாக இருந்தபோதும், அனுரகுமார திஸாநாயக்கவே மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார். ஊடகங்கள் வாயிலாக அரசாங்கத்திற்கு எதிராக அவர் குரல் கொடுத்தார்.

எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்சவுடன் கோப்பி அருந்திக்கொண்டு அண்ணன், தம்பி போல் இருந்தாரே தவிர மக்களுக்காக எதனையும் செய்யவில்லை. ரணில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற தனது பணியை சரியாக நிறைவேற்றவில்லை.

நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் நாங்களே மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தோம். ரணில், ரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் மக்களுக்காக குரல் கொடுக்கவில்லை. அதேபோல் நிமல் சிறிபால டி சில்வா எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு எந்த வகையிலும் பொருந்தமற்றவர்.

இது தவறான முன்னுதாரணம். சம்பிரதாயபூர்வமாகவே எதிர்க் கட்சித் தலைவர் நியமிக்கப்படுகின்றார். சட்டத்திட்டங்களுக்கு அமைய எதிர்க் கட்சி தலைவர் நியமிக்கப்படுவதில்லை. இதற்காக நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளைச் சட்டங்கள் இல்லை. அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டவர்களை எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு நியமிப்பது தவறானது.

அந்த அடிப்படையில், தினேஷ் குணவர்தனவும் அந்த பதவிக்கு தகுதியற்றவர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படும் அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க் கட்சிகள் இணைந்து எதிர்க் கட்சித் தலைவரை தெரிவு செய்ய வேண்டும்.

அப்படி நியமிக்கப்படும் நபரை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம். நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன போன்றவர்களை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளாது எனவும் லால்காந்த குறிப்பிட்டுள்ளார். (செ-11)




மிக குறுகிய காலத்தில் யாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஷைலோ ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் ஆகிய நாம் சுத்தமான, சுவையான, ஆரோக்கியமான, இயற்கையான ஊட்டங்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் SYLO ICE CREAM விற்பனை நிலையத்தை யாழ் நகர் பஸ் நிலையம் முன்புறம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

ஷைலோ ஐஸ் கிறீம்

Sylo Natural Ice Cream

இல. 442, ஆஸ்பத்திரி வீதி,
(சைக்கிள் பார்க் எதிரில்),
யாழ்ப்பாணம்.
T.P :- 021 221 7885
(9988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாகக் கூட்டணி ஒன்றை அமைத்து போட்டியிடுவது குறித்து மகிந்த கவனம்

(கொழும்பு)

தனியான கூட்டணி ஒன்றை அமைத்து தேர்தலில் போட்டியிடுவது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது பிரதமர் வேட்பாளராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தம்மை தெரிவு செய்யாவிட்டால், தனியான கூட்டணி ஒன்றை அமைத்து போட்டியிட முன்னாள் ஜனாதிபதி ஆயத்தமாகி வருகின்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு மாற்று அரசியல் சக்தியாக இந்த புதிய கூட்டணி இயங்கவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பெரும் எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலரும் இதற்கு ஆதரவளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துமாறு ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், மாறறு அரசியல் கட்சியொன்றின் ஊடாக மகிந்த போட்டியிட்டால் அவருக்கு ஆதரவளிக்க ஏற்கனவே சில அரசியல்வாதிகள் உறுதியளித்துள்ளனர். (இ-5)

# எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் சபாநாயகருடன் பேச்சுவார்த்தை

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தமாக தாம் மீண்டும் சபாநாயகருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தங்களுக்கு வழங்குமாறு இலங்கை தமிழரசு கட்சி சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை வழங்கியுள்ள நிலையிலேயே இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### நாகரத்தினம் நடேசமூர்த்தி
Traind (Sci),
SLPS-1

10.03.2015 அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம்– 1 வழங்கும் நிகழ்வில் 10.12. 2010 ஆம் நாள் தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம்– 1 வழங்கி கௌரவிக்கப்பட்ட

**நாகரத்தினம் நடேசமூர்த்தி**
Traind (Sci), SLPS-1


அதிபர் கிளி/ ஜெயபுரம் ம.வி. அவர்களை
மனமுவந்து
பாராட்டுகின்றோம். மேலும் கல்வியுலகில்
உயர்ந்து
மிளிர ஆசித்து நிற்கின்றோம்.

(073)

வாழ்த்துவோர்:-
பூநகரிக் கோட்ட அதிபர்கள்.


# ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## கருணா மறுப்பு



(கொழும்பு)

**அம்பாறை விநாயகபுரத்தைச் சேர்ந்த புவிராஜன் சசிகலா காணாமற்போனோரைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவின அமர்வில் சாட்சியமளித்த போது எனது பெயரைக் குறிப்பிட்டு என்மீது குற்றஞ்சாட்டியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட காலத்தில் உண்மையில் நான் இலங்கையிலேயே இருக்கவில்லை என முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான (கருணா) வி. முரளிதரன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.**

அப்படியிருக்க சகோதரி ஏன் அவ்வாறு கூறினாரோ தெரியவில்லை. இது அப்பட்டமான பொய், ஆதாரமற்ற குற்றச்சாட்டு. தனது பெயரைக் கெடுப்பதில் சிலர் கங்கணங்கட்டிக் குறியாகச் செயற்பட்டு வருகின்றனர். அத்தகைய தொரு சூழ்ச்சியாகவும் இது இருக்கலாம் என முரளிதரன் எம்.பி. தெரிவித்தார்.

சகோதரி சசிகலா மட்டுமல்ல முன்னாள் எம்.பி. சந்திரநேருவின் புதல்வரும் என் மீது இவ்வாறுதான் குற்றஞ்சாட்டினார். அதுவும் திட்டமிட்ட பொய்யானதொரு குற்றச்சாட்டு. உண்மையில் இந்த ஆணைக்குழு முன்பாக நானாக முன்வந்து பல உண்மைகளை முன்வைத்தேன். அவை பதிவிலுளளது.

முதலில் என்னை கருணா குழு என அழைப்பதை நிறுத்த வேண்டும். அத்தகைய தொரு குழு என்னிடம் எப்போதுமே இருக்கவில்லை.

நான் 2004 ஆம் ஆண்டு புலிகள் அமைப்பிலிருந்து விலகியது முதல் தனித்து எனது போக்கில் எனது தனிப்பட்ட வாழ்க்கைக்காக இயங்கி வருகிறேன். பின்னர் தேசியக் கட்சியான சுதந்திரக் கட்சியில் இணைந்து அதன் உயர்பதவியில் அமர்ந்து அமைச்சர் பதவியை வகித்து மக்களுக்குச் சேவை செய்து வந்தேன். இப்போதும் பாராளுமன்ற உறுப்பினராக இரு நந்து மக்கள் சேவை புரிகி ன்றேன.

காணாமற் போனோருக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும நானும் கவலைப்படுகிறேன்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் நான் அங்கம் வகிக்கவே இல்லை. என்னை அக்கட்சியுடன் தொடர்புபடுத்துவது முற்றிலும் தவறானது எனவும் முரளிதரன் மேலும் தெரிவித்தார். (இ-5)

# திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் ஐ.தே.கவில்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் அந்த கட்சியில் இணைந்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்வது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ள போதிலும், கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இறுதி தீர்மானத்தை அறிவிக்காததால், அத்தநாயக்க கட்சியில் இணைவது தாமதமாகி வருவதாக கூறப்படு கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியதாக திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

எனினும் தான் எடுத்த அந்த முடிவு குறித்து அவர் பல சந்தர்ப்பங்களில் கவலையை வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னணி தலைவர்கள் சிலர் அத்தநாயக்கவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருப்பதுடன் அவர்களே அவரை மீண்டும் கட்சியில் இணைக்கும் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்ததாக கூறப்படுகிறது. (இ-5)

# இராசி பலன்

13.04.2015
(பங்குனி 30, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
நவமி பிற்பகல் 2.45 மணிவரை
திருவோணம் பின்னிரவு 1.22 மணிவரை
இராகுகாலம் 7.36-9.06 மணிவரை
சுபநேரம் 12.06-01.36 மணிவரை

வளவன்

**மீனம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், கௌரவமான நாள்.

**மேடம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள், சுபகாரியங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது, தேகநலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப விரயங்கள் ஏற்படும் நாள் மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.

**கடகம்:** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்ல து, எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழிலில் முன்னேற்றம் காண நினைப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், நன்மைகள் நாடி வரும்.

**தனுசு:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு

**விருச்சிகம்:** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், தாய்வழி உறவில் அனுகூலமுண்டு, புதிய பொருட்களை வாங் குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன

**கன்னி:** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா



உலகிலேயே மிக அதிகமான வளர்ச்சியை எட்டிவரும் துறைகளில் முதலிடத்தில் இருப்பது சுற்றுலாத்துறைதான். மாறிவரும் பொருளாதார சூழலில் ஆண்டுதோறும் புதுப்புது இடங்களுக்கு சென்று பார்க்கும் மனிதர்களின் மனோபாவத்துக்கு ஏற்ப புதுப்புது சுற்றுலாத் தலங்கள் உருவாகிக் கொண்டே வருகின்றன.

- டூர் என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து இது உருவானது. கிரேக்க மொழியில் டூர்னோஸ் எனப்பட்டது.
- சுற்றுலாப் பயணி என்ற வார்த்தை 1772-ம் ஆண்டிலிருந்தே புழக்கத்தில் உள்ளது.
- சுற்றுலாத்துறை என்பது 1811-ம் ஆண்டில் உருவானது.
- 1936-ல் தான் சர்வதேச சுற்றுலாப் பயணி என்ற சொல் உருவானது.
- எண்ணெய், எரிவாயு தொழிலில் புரளும் பணத்துக்கு நிகராக அல்லது அதைவிட அதிக அளவில் பணம் கொழிக்கும் துறையாகத் திகழ்வதும் சுற்றுலாத் துறைதான்.
- வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலா மிக முக்கியமான துறையாகத் திகழ்கிறது.
- கடந்த ஆண்டு சர்வதேச அளவில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 5 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 100 கோடிக்கும் அதிகம்.
- கடந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் மூலமான ஏற்றுமதி வருமானம் ஒரு லட்சம் கோடி டொலராகும்.
- நாடுகளிடையிலான வர்த்தகத்தில் 30 சதவீதம் சுற்றுலாப் பயணிகள் மூலமானது.
- உலகின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) சுற்றுலாவின் பங்களிப்பு 5 சதவீதம்.
- சுற்றுலா சார்ந்த சேவைத் துறை ஏற்றுமதி 6 சதவீதமாகும்.
- 23 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் துறை. அதாவது 12-ல் ஒருவர் சுற்றுலா சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.
- 10 கோடி பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு அளிக்கும் துறையாகும்
- 2005-ல் சுற்றுலா தொழில் வருமானம் 4,75,000 கோடி டொலர்.
- 2013-ல் இத்தொழில் மூல மான வருமானம் 1,15,900 கோடி டொலர்.
- பயணிகள் போக்குவரத்துக்கு செலவிட்ட தொகை 21,800 கோடி டொலர்.
- வெளிநாடுகளுக்கு சுற்றுலா போக வசதியில்லா விட்டாலும் இப்போது உள்நாட்டு சுற்றுலா அதிகரித்துள்ளது. கோடை விடுமுறையில் சுற்றுலா தலங்களில் உள்நாட்டு பயணிகளின் எண்ணிக்கை அனைத்து நாடுகளிலும் அதிகமாகவே இருக்கிறது.




## புத்தாண்டை முன்னிட்டு DFCC வங்கியின் விசேட பணப்பொதி

இலங்கையில் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் வர்த்தக வங்கியான DFCC வர்த்தன வங்கி எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டைக் கொண் டாடும் முகமாக "பணப் பொதி" என்ற விசேட ஊக்குவிப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

2015 ஏப்பிரல் 6ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையே நாடெங்குமுள்ள கிளைகளின் மூலம் அமுல் செய்யப்படும் இத் திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் விசேட நன்மைகளைப் பெறுவார்கள்.

ஒரு வருட நிலையான வைப்பிற்கு 8% வட்டியும் ஆறு மாத கால நிலையான வைப்பிற்கு 7.75 % வட்டியும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

இதனைத் தவிர, சேமிப்பு வைப்புக்களுக்கென "பணப் பொதி" திட்டத்தின் கீழ் விசேட வெகுமதிகளையும் வங்கி வழங்கும். ஊக்குவிப்புத் திட்டக் காலப்பகுதியில் ரூ.5,000க்கு மேற்பட்ட தொகையை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யும் வாடிக்கையாளர்கள் வர்தன அன்பளிப்புச் சான்றிதழ்கள் மூலம் விசேட வெகுமதிகளுக்கும் பணப் பரிசுகளுக்கும் தகுதி பெறுவார்கள்.

ஊக்குவிப்புத் திட்டக் காலப்பகுதியில வங்கி தனது 137 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் பாரம்பரிய "புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்" நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

DFCC வர்தன வங்கி, தரமுயர்ந்த நிதிச் சேவைகளின் 12ஆவது ஆண்டு நிறைவை இந்த வருடத்தில் கொண்டாடுகிறது. இலங்கையின் முதலாவது விசேட அபிவிருத்தி வங்கி என்ற பெருமைக்குரிய DFCC வங்கியின் வர்த்தகப் பிரிவான DFCC வர்தன வங்கி, உயிர்த்துடிப்புடன் செயற்படும் இளைய வங்கி என்ற முறையில் தேசிய பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்வதுடன் சமூகத்தினர் மத்தியில் நட்புறவு, நல்லெண் ணம், உறுதிப்பாடு என்பவற்றையும் பரப்புவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

DFCC வங்கி மற்றும் DFCC வர்தன வங்கி பற்றி...

DFCC வர்தன வங்கி நாட்டின் பல பகுதிகளிலும் 137 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களைக் கொண்டுள்ளது. இந்த வலைய மைப்பில் 59 தபால் அலுவலகப் பிரிவுகளும் உள்ளடங்கும்.

DVB என்பது DFCC குழுமத்தில் அங்கம் வகிக்கும் ஒரு வர்த்தக வங்கியாகும். உலகிலுள்ள மிகப் பழமை வாய்ந்த அபிவிருத்தி வங்கிகளில் ஒன்றான DFCC வங்கி, 1955-ம் ஆண்டு பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் நிறுவப்பட்டது. DFCC குழுமம் இன்று ரூ.151 பில்லியனுக்கு மேற்பட்ட மொத்தச் சொத்து அடித்தளத்தைக் கொண்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE


| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,948.14 | 6,901.06 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,909.58 | 3,888.33 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,476.199 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சிரஸ் லிசர்(W) (0.50), தலவாக்கலை(36.30), இன்டோ மலே(1800.00), கலமசு(1110.00), மகாவலி றீச்(23.30).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** டேர்டன்ஸ்(95.30),புளூ டைமன்ஸ்(X) (0.60), ஒபிஸ் ஈகுப்மன்ட்(1908.30), மல்ரி பினான்ஸ்(23.30), பிசி பார்மா(0.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## ஸ்ரேயா கோஷலுக்கு அனுசரணை வழங்கிய எலிபன்ட் ஹவுஸ்




இந்தியாவின் புகழ்பெற்ற பெண் பின்னணி பாடகியான ஷ்ரேயா கோஷல் கொழும்பில் நடத்திய மாபெரும் பாடல் நிகழ்வுக்கு எலிபன்ட் ஹவுஸ் மென்பானங்கள் மற்றும் ஐஸ் கிறீம் ஆகியன அனுசரணை வழங்கியிருந்தன.

இதன்மூலம் ரசிகர்களுக்கு தமது கரங்களில் தமக்கு விருப்பமான எலிபன்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் மற்றும் மென்பானங்களை வைத்து அருந்தியவாறே, ஷ்ரேயா கோஷல் நிகழ்வை முழுமையாக ரசித்து மகிழ்வதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தது.

ஹவ்லொக் மைதானத்தில் இடம்பெற்றிருந்த ஷ்ரேயா கோஷல் நிகழ்வு, இலங்கையில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டிருந்த நிகழ்வுகளில் பெருமளவு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வாக அமைந்திருந்தது.

இலங்கையின் மிகவும் பிரபல்யமான மென்பொருள் மற்றும் ஐஸ்கிறீம் வர்த்தக நாமமான, எலிபன்ட் ஹவுஸ் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக இணைந்து செயலாற்றியிருந்தது.

அண்மையில் வெளியாகி இலங்கை சினிமாக்களில் அதிகளவு பிரபல்யம் பெற்றிருந்த பொலிவுட் திரைப்படமான "Devdas" படத்தின் மூலம் பிரபல்யம் பெற்ற ஷ்ரேயா கோஷல், இதனைத் தொடர்ந்து வெளியாகிய பல புகழ்பெற்ற திரைப்படங்களில் பல பிரபல்யமான பாடல்களை பாடியிருந்தார்.

அதுபோலவே, அவரின் பாடல் திறமை என்பது ஹிந்தி மொழி பாடல்களுக்கு அப்பால் சென்று, வங்காளம், கன்னடா, மலையாளம், தமிழ், தெலுங்கு, குஜராத், மராதி மற்றும் பஞ்சாப் ஆகிய மொழிகளிலும் பாடல்களைப் பாடியிருந்தார்.

## சீனாவுக்கு ஹொங்கொங் போல இந்தியாவுக்கு இலங்கை

### - நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க

ஹொங்கொங் சீனாவுக்கு எவ்வாறோ அவ்வாறு இந்தியாவுக்கு இலங்கை அமைந்திருக்கலாம். ஆனால் இலங்கையில் 30 ஆண்டுகள் நடந்த உள்நாட்டு யுத்தம் மற்றும் தவறான ஆட்சி ஆகியவற்றால் அந்த வாய்ப்பை தவறவிட்டுவிட்டது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஹொங்கொங்கில் நடைபெற்ற 18ஆவது ஆசிய முதலீட்டு மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட வளர்ச்சிக்கும் வறுமையை அகற்றுவதற்கும் இலங்கை வெளிநாட்டு மூலதனத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறது.

அதற்கான தடைகளை நீக்குவது எமது முக்கிய பணியாக அமைந்துள்ளது. அத்துடன் எமது விதிமுறைகளை மாற்றியமைத்து வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. சீனாவுடனான ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளது. ஐக்கிய அமெரிக்காவுடனும் இவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்யவுள்ளோம்.

எதிர்வரும் ஆண்டில் கைத்தொழிற்றுறை, உல்லாசப் பயணம் , விவசாயம் , பெற்றோலியம் போன்ற துறைகளினூடாக தேசிய உற்பத்தியை 7.5 வீதமாக உயர்த்த உள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## Easy Claim சேவையை அறிமுகம் செய்துள்ள ஜனசக்தி

நஷ்டஈட்டு கொடுப்பனவுகளை உடனடியாக வாடிக்கையாளருக்கு வழங்கும் முகமாக புரட்சிகரமான Easy Claim சேவையை ஜனசக்தி நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இதனூடாக வாடிக்கையாளர்கள் இனிமேலும் வரிசைகளில் காத்திருக்காது எந்தவொரு சம்பத் வங்கி ATM இயந்திரத்திலிருந்தும் தமது மோட்டார் வாகன நஷ்டஈட்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனசக்தி அறிமுகப்படுத்தியுள்ள புதிய சேவையே இதுவாகும். வாடிக்கையாளருக்கு சௌகரியமானதும், தொந்தரவு அற்றதுமான சேவையை வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்த Easy Claim சேவை ஊடாக நஷ்டஈட்டு கொடுப்பனவு அனுமதிக்கப்பட்ட பின்னர் 24 மணித்தியாலயத்திற்குள் சம்பத் வங்கி ATM இயந்திரத்திலிருந்து பணத்தை பெறக்கூடியதாகவுள்ளது.

நஷ்டஈட்டு கொடுப்பனவுகளை பெறுவதற்கு வங்கிகணக்கொன்றை கொண்டிருப்பதற்கான தேவை இனியும் இல்லை.

"புதிய Easy Claim சேவை மிகவும் சௌகரியமிக்கது. இதற்கு முன்னர் ஜனசக்தி அலுவலகத்திற்கு சென்று வெவ்வேறாக எனது வங்கிக்கணக்கில் பணத்தை வைப்பிலிட வேண்டியிருந்தது. ஆனால் தற்போது வங்கியிலிருந்து உடனடியாக பணத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது" என வர்த்தக முகாமையாளரான ருக்ஷான் சிறியந்த பெரேரா தெரிவித்தார்.

"இனிமேலும் வரிசைகளில் காத்திருந்து நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை என்பதால் இச்சேவையை நான் மிகவும் விரும்புகின்றேன்" என மோட்டார் ஓட்டுநரான மதுசங்க தெரிவித்தார்.

வாகனம் விபத்துக்குள்ளானவுடன் செய்ய வேண்டிய செயற்பாடுகளை மேற்கொண்டு தேவையான விபரங்களையும் பூர்த்தி செய்த பின்னர், வினைத்திறனுடன் 24 மணிநேரமும் இயங்கும் ஜனசக்தியின் வாடிக்கையாளர் சேவை அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்வதனூடாக, மிக விரைவாக நஷ்டஈட்டு கொடுப்பனவுகளையும், onsite settlement போன்ற செயற்பாடுகளையும் உறுதிசெய்து கொள்ள முடியும்.

இதன் பொருட்டு Easy claim கோரிக்கைகளை வழங்குவதற்காக பிரத்தியேகமான குழு செயற்படுகிறது. வாகனம் விபத்துக்குள்ளாகி தேவையான அனைத்து விடயங்களை பூர்த்தி செய்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 12 மணித்தியாலத்திற்குள் சேவைகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த பிரத்தியேக குழுவினர் செயற்பட்டு வருவதாக ஜனசக்தி அறிவித்துள்ளது.

"ஜனசக்தி இன்சூரன்ஸ் என்பது மோட்டார் காப்புறுதி பிரிவில் பல்வேறு புத்துருவாக்கங்களை உருவாக்கிய நிறுவனமாகும் என மோட்டார் பிரிவின் சிரேஷ்ட வர்த்தக நாம முகாமையாளர் கௌஷலா அமரசேகர தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.75 | 134.54 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.17 | 198.72 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 139.78 | 144.45 |
| சுவிஸ் பிராங் | 127.15 | 131.65 |
| கனேடிய டொலர் | 104.10 | 107.54 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.63 | 104.74 |
| சிங்கப்பூர் டொலர் | 96.57 | 99.69 |
| ஜப்பான் யென் | 1.08 | 1.12 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ.சு.க.மத்திய செயற்குழுவிலிருந்து குமாரவெல்கமவையும் நீக்கத்திட்டம்

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்குவதற்கு முயற்சிப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்க நெறிகளை மீறியதாகவும், இரத்தினபுரியில் இடம் பெற்ற பேரணியில் கலந்து கொண்டதனாலும் ஸ்ரீ.சு.கவின் சில உறுப்பினர்களை மத்திய செயற்குழுவில்இருந்து நேற்று முன்தினம்பதவி விலக்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேலும் சில உறுப்பினர்களை கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்க கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும் குமார வெல்கம ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தலைவர் என்பதனால் இத்தீர்மானத்தை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும்,இது தொடர்பில் கட்சியில் இரகசிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.(இ-5)

# ஹைபை காட்டிய மகிந்த; கயந்த கருணாதிலக்க

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தனது பலத்தை (hifi) காட்டியதாகவும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் இலவசவைபை மற்றும் சலுகைக்கு மேல் சலுகைகளை வழங்கி மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தி வருவதாகவும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சரின் அழைப்பின் பேரில் எல்பிட்டிய பிரதேசத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைபை வலயத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அதே வேளை கர்ப்பிணி தாய்மாருக்கு போஷாக்கு பொதியை வழங்கும்நிகழ்வும் எல்பிட்டிய மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. (இ-5)

# மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆவணப்படுத்தும் செயற்றிட்டம் விரைவில்

## வடக்கு மீன்பிடி அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல், சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள், கிராமிய மீனவர் அமைப்புக்கள் தொடர்பிலான பிரச்சினைகள் போன்றவற்றை ஆராய்ந்து இலங்கை-இந்திய மத்திய அரசுகளிற்கு எழுத்து மூலம் ஆவணப்படுத்தும் விசேட செயற்றிட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும்மாகாண மீன்பிடி அமைச்சர் தலை மையில் கூட்டங்கள் கூட்டப்பட்டு இரு வாரங்களுக்குள் இருநாட்டு அரசுகளிடமும் ஆவணப்படுத்தும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் வினவிய போதே டெனீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலினால் இலங்கையிலுள்ள 9 மாகாணங்களில் வடக்கு மாகாணமே அதிகளவு பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றது. இதே போல் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலும் வடக்கு மாகாணத்தில் தற்போதும் அதிகரித்த நிலையிலையே காணப்படுகிறது.

இப் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாணத்திலுள்ள மேற்குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களிலும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம். இப் பேச்சுவார்த்தையில் எட்டப்படுகின்ற முடிவுகள் மற்றும் தீர்வுகளை வைத்து அறிக்கையொன்றைத் தயாரிக்கவுள்ளோம்.

அந்த அறிக்கையில் இந்திய இழுவைப் படகுகளால் ஏற்படும் பாதிப்புக்கள், உள்ளூர் மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடிகளினால் ஏற்படும் பாதிப்புகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அரசியல் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள கிராமிய மீன்பிடி அமைப்புக்கள் ஆகியன உள்ளடக்கப்படவுள்ளன.

கடந்த 2 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மத்திய கடற்றொழில் அமைச்சு, மத்திய கடற்றொழில் நீரியியல் வளத் திணைக்களம், கடற்படை, வடக்கு மாகாண கடற்றொழில் அமைச்சு ஆகியனவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இச் சந்திப்பில் வடக்கு மாகாணத்திலுள்ள மீனவர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சுக்கு ஜனாதிபதி அதிகாரம் வழங்கியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் வடக்கு மாகாண அமைச்சிற்கு தரப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்குள்ள மீனவர்களின் நாளாந்த மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகளை மாகாண அமைச்சே தலையிட்டு தீர்த்து வைப்பதற்கான செயற்றிட்டங்களை எதிர்வரும் நாட்க ளில் ஆரம்பிக்கவுள்ளோம்.

கடந்த காலங்களில் இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இரு அரசுகளின் உயர் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்திருந்தன.

எமது விசேட செயற்றிட்டத்தின் மூலம் கிராமிய மட்டத்திலுள்ள மீனவர்களின் பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்பட்டு அப் பிரச்சினைகள் உயர் மட்டத்தில் நடைபெறுகின்ற சந்திப்புக்களில் வெளிப்படுத்தப்படும். அதனூடாக அப்பிரச்சினைகளுக்குத் தீர்வை ஏற்படுத்த எம்மாலான முயற்சிகளை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்றும் டெனீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்-2014

**யா/கொற்றாவத்தை அ.மி.த. க.பாடசாலை வல்வெட்டித்துறை**

த.மிதிலா-7ஏ2பி, தி.சரண்யா-7ஏபிசி, ர.கிருசிகா- 6ஏ3சி, த.குருபரன்-3ஏ4பி2சி, ஜெ.தனுசியா-3ஏபி3சிஎஸ், கு.லக்சிகா-2ஏ3பி2சிஎஸ், அ.கீர்த்தனா-2ஏ3பி2சிஎஸ், வ.மோகனப்பிரியா-2ஏபி2சி2எஸ், ம.சுமித்-ஏ3பி3சிஎஸ், கு.கலையரசி-ஏ2பி4பிஎஸ், சி.நிவர்த்திகா-ஏபி4சி2எஸ், த.மதுசூதனன்-ஏபி4சிஎஸ், ப.வினித்-பி3சி3எஸ், செ.திசாயினி-பி2சி4எஸ், வி.லக்சன்-பி2சி3எஸ், இ.பிரதீஸ்-பி2சி3எஸ்.

# அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட வேண்டும்

### டக்ளஸ் எம்.பி.வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களில் சிலருக்குரிய காணி உறுதிகள் அண்மையில் வழங்கப்பட்டதை சுட்டிக் காட்டியுள்ள டக்ளஸ் தேவானந்தா அதே போன்று ஏனைய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரிவுகளில் அரச காணிக ளில் குடியிருக்கும் மக்களுக்கும் காணி உறுதிகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

அதே நேரம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கட்டைக்காடு கிழக்குப் பகுதியில் அரச காணியில் குடியிருக்கும் மக்களது காணி தொடர்பான பிரச்சினையை உடன் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கைவிஷேடம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு சேமிப்பு ஊக்குவிப்பு மற்றும் கைவிஷேடம் வழங் கும் நிகழ்வு என்பன நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடந்த ஆணடு புலமைப்பரிசில் தேர்வில் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களும் இவ்வாண்டு முதலாம் வகுப்பில் சேர்ந்து கொணட மாணவர்களும்தமதுபெற்றோர்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஹயஸ் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(கொடிகாமம்)

**யாழ்ப்பாணத்திலிருந்து தென் பகுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் ஒன்று கொடிகாமம் சந்தியில் குடும்பஸ்தர் ஒருவரை மோதி விபத்துக்குள் ளாக்கியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.**

நேற் று அதிகாலை 4.30 மணியளவில் இக்கோரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் கொடிகாமம் எருவன் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை யான முத்துவேல் அகிலேஸ்வரன் (வயது 34) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை கச்சாய் வீதியிலிருந்து பருத்தித்துறை வீதிக்குச் செல்ல முயன்ற பிரஸ்தாப குடும்பஸ்தர் பிரதான வீதியைக் கடக்க முயற்பட்ட போது வேகமாக வந்த ஹயஸ் வாகனம் குடும்பஸ்தரை மோதியதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

சம்பவத்தையடுத்து வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3-60-285)

# மீள்குடியேற்றமென அழைத்து மக்களை ஏமாற்ற வேண்டாம்

### வலி.வடக்கு மீள்குடியேற்றக்குழு கோரிக்கை

மீள்குடியேற்றம், காணிகள் விடுவிப்பு என அறிவித்துவிட்டு மக்களை அழைத்து ஏமாற்றாமல் தீர்க்கமான முடிவெடுத்து முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அரச அதிகாரிகள் அரசியல்வாதிகள் ஒன்று சொல்ல இராணுவம் அதற்கு முரணானதை செய்து வருகின்றது எனவும் தாம் பிறந்து வளர்ந்த மண்ணை, வீட்டை பார்ப்பதற்கு எதிர்பார்ப்புடன் வந்து மக்களை திருப்பி யனுப்புவது என்பது மோசமான ஒரு விடயம் என வலிகாமம் வடகது மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ் .சுஜீவன் தெரிவித்துள்ளார். வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றம் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள அவற்றை மக்கள் சென்று பார்வையிடலாம் என அறிவித்து மக்களை அங்கு வரவழைத்தனர்.

24 வருடங்களின் பின்னர் தாம் பிறந்த மண்ணை வீட்டைப் பார்க்க போகின்றோம் என எதிர்பார்ப்புடன் சென்ற மக்களை இராணுவம் தடுத்து நிறுத்தியுள்ளது.

இது மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்கு புதிய அரசாங்கம் மேற்கொள்கின்ற ஏமாற்று நாடகமேயாகும். ஏற்கனவே வளலாயில் ஒரு பகுதி மக்கள் மீள்குடியேற முடியாத காணிகளை விடுத்து விட்டு அங்கு இன்னமும் மக்கள் மீள்குடியமரவில்லை என கூறிக் கொண்டுள்ள அரசு வலி.வடக்கிலும் அதே தந்திரத்தை கையாள முயற்சிக்கி ன்றது.

இரண்டாம் கட்டமாக 590 ஏக்கர் அளவு நிலப்பரப்பினை விடுவிக்கவுள்ளோம் என அறிவித்த அரசு ஏன் அதனை முழுமையாக விடுவிக்கவில்லை? ஆயிரம் ஏக்கருக்கு மேல் உயர் பாதுகாப்பு வலயத்தில் விடுவப்போம் என அறிவித்த அரசு அல்லது விடுவித்த காணிகளில் 200 இற்கும் குறைவான இடங்களே மக்கள் வசித்த காணிகளாகும்.

ஏனையவை அனைத்தும் 24 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வசிக்க முடியாத பற்றைகள் நிறைந்த் காடுகளாகும். வலி. வடக்கில் உள்ள அநேகமான மக்கள் காணிகளில் இராணுவத்தின் கலிபர் துப்பாக்கி சுடும் பயற்சி கூடங்களே இவ்வாறு காணபபடுகின்றன.

இந்நிலையில் அருகில் மக்கள் காணிகளை விடுவித்துவிட்டு அங்கு இராணுவம் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மக்கள் மீள்குடியேற முடியுமா? எனவும் சஜீவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் காணிகள் விடுவிக்கப்பட அல்லது பார்வையிட அனுமதிக்கப்படும் போது அரச அதிபரோ அல்லது அரச தரப்பு உயர் அதிகாரிகளோ உடன் வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-4)




# போரின் பின் இளைய தலைமுறை தவறான பாதையில் பயணிக்கிறது

### மாகாண சபை உறுப்பினர் விந்தன் கவலை

(யாழ்ப்பாணம்)

போருக்குப் பின்னர் எமது இளம் தலைமுறையினர் தவறான பாதையில் பயணிப்பதாக சுட்டிக்காட்டியுள்ள வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் அவர்களை ஆன்மீகத்தில் நாட்டம்கொள்ள வைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

ஆறுகால்மடம் அரசடி ஞான வைரவர் ஆலயத்தில் திருவிழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலைய தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் நடைபெற்றது . இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பல இழப்புக்களைக் கண்டு மீண்டெழுந்த இனம் தற்போது சில சமூக பிரள்வுகளில் ஈடுபடுவது கவனத்துக்குரிய விடயமாகும். கட்டுக்கோப்புடன் உலக அரங்கில் ஒரு எடுத்துக்காட்டுமிக்க இனமாக காணப்பட்ட இனம் தற்போது தமது கலாசாரத்தை இன உணர்வை மெதுவாக மறந்து வருகின்றமை வேதனையளிக்கின்றது.

இவ்வாறான பிறள்வுகளில் இருந்து நாம் தப்பித்துக் கொள்ள இளைஞர்களை ஆன்மீகத்தில் ஈடுபடவைப்பதே நமது வழிமுறையாகும்.

பாடசாலை மாணவர்கள் அனைவரும் கிழமையில் ஒரு நாளாவது தமது அயலில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட ஈடுபட வேண்டும். இதற்கு எமது சமூகத்தில் உள்ள பெரியார்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# பிரதேசசபை உறுப்பினர் நேற்றுக் காலமானார்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர் மதியரசன் (வயது 47) நேற்று காலை காலமா னார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் மந்திகை வைத்தியசாவையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர்உயிரிழந்துள்ளார். அதேவேளை பூசாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரது மகனை தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள அழைத்து வருவதற்கான முயற்சிகளை கூட்டமைப்பு மேற்கொள்ளவுள்ளதாகத்தெரியவருகிறது (இ-3-60)

## புத்தாண்டுவிழா

கல்வயல் ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலய புத்தாண்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 4 மணிக்கு சி. இலந்திரையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முக்கிய நிகழ்வாக ஆலய முன்பள்ளி ஆசிரியர்கள் அறநெறி வகுப்பு ஆசிரியர்கள் கல்வயல் சண்முகானந்த சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்கி வைக்கப்படவுள்ளது. இதில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானப்பீட விரிவுரையாளர் க.கந்தசாமி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கிருபாசக்தி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சி. விவேகானந்தர் அறிவித்துள்ளார். (இ

# கோவில் களஞ்சியஅறை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

கப்பூது நுணுப்பாவளை கந்தசாமி கோவிலின் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் மாலை கோவில் பூசை முடிவுற்ற பின்னர் பூசகர் வீடு திரும்பியுள்ளார். இந்நிலையில் நேற்று அங்கு சென்ற போது மடப்பள்ளி மற்றும் களஞ்சிய அறை என்பன உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

களவாடப்பட்ட பொருட்கள் வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மத வருஷப் பிறப்புக் கருமங்கள்

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரி புதன் செவ் | சுக் | |
| | மன்மத வருஷப் பிறப்பு ஜாதகம் | | லக்கினம் குரு |
| சந் | | | |
| | சனி | | ராகு |

**வாக்கிய பஞ்சாங்கம்**

சரியான மன்மத வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (14.04.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.23 மணிக்கு. அபர பக்க தசமித்திதியில் அவிட்ட நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சுபம் நாமயோகத்தில் லிட்டிக் கரணத்தில் கடக லக்கினத்தில் கடக நவாம்சத்தில் குருகால வோரையில் சுக்கிரன் சூக்கும காலவோரையில் தூமத குணவேளையில் நட்சத்திரப் பட்சியாகிய ம யில் நடைத்தொழிலும் சூக்கும பட்சி நடைத்தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய மன்மத வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 8.23 மணிமுதல் அன்று பிற்பகல் 4.23 மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள், சித்திரை, உத்தராடம் 2,3,4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரமதோசத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

மன்மத வருஷம் சித்திரை மாதம் முதலாம்திகதி (14.04.2015) செவ் வாய்க்கிழமை பிற்பகல் 01.47 மணிக்கு மன்மத என்னும் பெயருடைய புதுவருடம் பிறக்கிறது. அன்று நட்சத்திரம் அவிட்டம் 2 ஆம் கால், திதி அபரபட்ச தசமி, இது 60 வருட சுற்று வட்டத்தில் 29ஆவது வருட ாகும். அன்று காலை 9.47 மணிமுதல் மாலை 5.47 மணிவரை மேட சங்கிர மண புண்ணிய காலமாகும். வருடம் பிறக்கும்போது உதய லக்கினம் கடகம் ஆகும்.

**சங்கிரமதோச நட்சத்திரங்கள்**

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம் , ஆயிலியம், சித்திரை, உத்தராடம் 2,3,4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் கால்கள்.

**மருத்துநீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீக்கு பால், கோசலம், கோம யம், கோரோசனை, மஞ் சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்தி லிட்டு காய்ச்சிக் கொள்க.

## புதுவருட கைவிசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| **வாக்கிய பஞ்சாங்கம்** | | |
| 15.04.2015 | புதன் | முற்பகல் 9.57-10.15 மணிவரை |
| 15.04.2015 | புதன் | முற்பகல் 10.23-11.58 மணிவரை |
| 15.04.2015 | புதன் | பிற்பகல் 2.10-4.06மணிவரை |
| **திருக்கணித பஞ்சாங்கம்** | | |
| 15.04.2015 | புதன் | காலை 7.52-9.50 மணிவரை |
| 15.04.2015 | புதன் | முற்பகல் 10.00-11.50 மணிவரை |
| 17.04.2015 | வெள்ளி | காலை 6.01-6.49 மணிவரை |

# கடற்படையால் கைதுசெய்யப்பட்ட உறவுகளை விடுதலை செய்யவும்!

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தம்து உறவினர்களை விடுதலை செய்யுமாறு சிலாபம், இரனவில மீனவ சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடந்த மாதம் 21 ஆம் திகதி திருகோணமலை கடறபரப்பில் மீன்பிடிக்க சென்ற 6 மீனவர்களை இந்திய கடறபடையினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை இம்மாதம் 4ஆம் திகதி சென்னை நகரத்திற்கு குறித்த மீனவர்கள் அழைத்து செல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியது, அதன் பின்னர் அவர்கள் குறித்து எவ்வித தகவல்க ளும் கிடைக்கவில்லை என மீனவர் சமூகத்தினர் தெரிவித்தனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்கின்ற போதிலும் இந்தியாவில் கைது செய் யப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களின் விடுதலை குறித்து இநநாட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதில்லை என இரனவில மீனவர் சமூகத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (இ-5)

# போலி வைத்தியர் கைது

. (கொழும்பு)

தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் வைத்தியரை போன்று நுழைந்த நபர் நேற்று முன்தினம் காலைபிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வைத்தியருக்கான போலி அடையாள அட்டை மற்றும் வைத்திய உபகரணங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த நபர் சாதாரண உடையுடன் சத்திர சிகிச்சை அறைக்குள் செல்ல முற்பட்ட போது, அங்கிருந்த வைத்தியர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் காரணமாக மடக்கி பிடிக்கப் பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மெதிகிரிய பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# 7500 பேருக்கு விலகல் கடிதம்

விடுமுறை பெறாது இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களுக்காக வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலப் பகுதியினுள் 10 ஆயிரத்து 200 பேர மீள திரும்பியுள்ளதாக இராணுவம் தெரி வித்துள்ளது.

இராணுவ ஊடக பேச்சா ளர பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர இதனை தெரிவித் துள்ளார்.

இந்த பொது மன்னிப்பு காலம் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை அமுலில் உள்ளது.

இதற்கமைய, நேற்று முன தினம் வரை மீள திரும்பியவர்களில் 7 ஆயிரத்து 500 பேருக்கு விலகல் கடிதம் வழங்க முடிந்துள்ளதாக இராணுவ ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் வலிகாமம் பிரதேசத்தில், ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உரிமையாளர்களுக்கு வழ ங்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. அமைச்சரவை அனுமதி கிடைக்க பெற்றதன் பின்னர், இந்த நிலப்பரப்பு உரியவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கடந்த 23 ஆம் திகதி 430 ஏக்கர் நிலப் பரப்பு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 590 ஏக்கர் நிலப்பரப்பு வலி காமம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் நேற்று முந்தி னம் விடுவிக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்துளளது. (இ-5)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

10.03.2015 அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம்- 1 வழங்கும் நிகழ்வில் 02.07.2008 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம்- 1 வழங்கி கௌரவிக்கப்பட்ட

சுப்பிரமணியம் தர்மரத்தினம்

B.A.HON's, M.A., PGDE, PGDEM (merit) M.Ed(Merit) SLPS-1

கோட்டக்கல்விப் பணிப்பாளர்- பூநகரி

அவர்களை மனமுவந்து பாராட்டுவதோடு மென்மேலும் கல்வியுலகில் உயர்ந்து மிளிர ஆசித்து நிற்கின்றோம்.



வாழ்த்துவோர்: பூநகரி கோட்ட அதிபர்கள்.



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 24 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன் PR<br>தொ.இ: B/2246 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 35 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/898 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4028 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 29 3/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: தொழில்நுட்பவியலாளர் நோர்வே<br>தொ.இ: G/899 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 97 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/491 | பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 6 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/902 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L லண்டன் NOT PR<br>தொ.இ: B/493 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 61 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/908 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிர.சபையின் செயற்பாடுகள் ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்குகின்றன

## செயலாளர் ஜெயசீலன் செல்வன் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையானது ஆளணி பற்றாக்குறையுடன் இயங்கி வருவதால் பொது மக்களுக்கான சேவையினை முழுமையாக வழங்க முடியாதுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஜெயசீலன் செல்வன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், கரைதுறைப்பற்று பிரதேச சபையானது 46 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதுடன்.219 கிராமங்கள் 13 பொதுச்சந்தைகள், பொது நூலகம் நான்கு, சனசமூக நிலையங்கள் 40 ஆகியவை உட்பட பொது மக்கள் சார்பான சேவைகளை உள்ளடக்கிய728.6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும்.

இங்கு ஆளணிகளைப் பொறுத்த வரையில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

91 அனுமதிக்கப்பட்ட ஆளணி தேவையானவிடத்து தற்போது 54 பேர் கடமையாற்றி வருகின்றனர்.

வருமான பரிசோதகர்கள் நான்கு பேர் தேவையானவிடத்து ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நான்கு பேர் தேவையானவிடத்து பயிற்சி தரத்தில் உள்ள இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

சுகாதார தொழிலாளிகளைப் பொறுத்த வரையில் அனுமதிக்கப்பட்ட தொகை 18 என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 13பேர் கடமையாற்றி வருகின்றனர்.

ஆனால் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பணிகளை முன்னெடுக்க அண்ணளவாக 30 சுகாதார தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான ஆளணி நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ,நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப் பெறவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆளணி பற்றாக்குறை காரணமாக 10 பொதுச்சந்தைகளில்தினசரிகொட்டப்படுகின்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் பிரதேச சபைக்கான வருமாணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தயாரிக்கப்படுகின்ற திட்டங்களினை ஒழுங்குபடுத்தி அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும் பிரதேச சபையினால் முடியாது இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-15)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 2 இலட்சம் ரூபாய் நிதியில் இருந்து உடற்பயிற்சி உபகரணங்களை மன்னார் மாவட்டத்தில் உள்ள உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கி வைத்துள்ளார்.

(படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மாணவர்களுக்கு உதவிக் கொடுப்பனவு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் வாழும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கான மாதாந்த உதவித்தொகை வழங்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி காலை கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில், உயர்கல்விக்கு தகுதிபெற்ற மாணவர்கள் குறித்த திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் குறித்த மாணவர்களின் உயர்கல்வி கற்றல் செயற்பாட்டிற்காக மாதாந்தம்தலா ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 300 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், கரைச்சிபிரதேச செயலர் பிரிவில் 167 பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான சான்றிதழும், வைப்புப் புத்தகமும் அன்றைய தினம் கையளிக்கப்பட்டது.பிரதேச



செயலாளர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாழ் வின் கிளிநொச்சி எழுச்சித் திட்ட பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2-281)

வன்னி வலம்

## 5500 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள்

### அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(மன்னார்)

2015ஆம் ஆண்டு, ஜனவரி ஆரம்பத்திலிருந்து ஏப்ரல் 7ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சுமார் 5,500 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் அண்மையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் உயர்மட்ட குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,விலைமாற்றுதல், காலாவதியான பொருட்களின் திகதியை மாற்றி விற்பனை உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் இருந்து விலகுமாறு வர்த்தகர்களுக்கு நாம் கடுமையாக எச்சரிக்கின்றோம்.

இதேவேளை வருகின்ற புதுவருடத்தை முன்னிட்டு நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுவதில் இருந்து தவிர்க்கப்படுவதற்கு பாதுகாப்பு அதிகார சபையினர் தீவிர செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நுகர்வோருக்கு சிறந்ததொரு வணிக அனுபவத்தை புதுவருட காலத்தில் பெற்றுக்கொடுப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தலைமையிலான புதிய அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தி வருகிறது.

நாடு பூராகவுமுள்ள அனைத்து களஞ்சியசாலைகளுக்கும் தேவையான பொருட்களை உரிய நேரத்தில் வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் விருப்பத்துக்கு ஏற்ப, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினூடாக சீனி, கோதுமைமா மற்றும் பாண் உள்ளிட்ட 13 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்த விடயமே.

நுகர்வோர் அதிகார சபையானது, நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் ஓர் உயர் அரச அமைப்பு என அமைச்சர் கூறினார்.

இதில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் உயர்மட்ட குழுவினர், சதோச நிறுவன அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர். (2)

## ஆந்திரா படுகொலை சம்பவம் தமிழின ஆன்மாவை ஆழமாகத் தாக்கியுள்ளது

### வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கண்டனம்

தமிழக தொப்புள்கொடி உறவுகள் 20 பேர் ஆந்திராவில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது தமிழின ஆன்மாவை ஆழமாகத் தாக்கியுள்ளது என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இரத்தத்தை உறைய வைக்கும் இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ளவர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டனச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கண்டன செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு.

ஆந்திராவில் 20 அப்பாவித் தமிழர்கள் சுட்டுக்கொலை என்கிற செய்தியும் அதன்பின்னர் வெளிவந்த புகைப்படங்களும், முற்றிலும் பொருத்தமற்று முன்வைக்கப்படுகிற நியாயப்படுத்தல்களும் தமிழர் மனங்களில் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டு வருகிற இனப்படுகொலையின் அதிர்ச்சியில் இருந்து மீளாமல் இருக்கும் உலகத் தமிழர்கள், இச்சம்பவத்தால் துவண்டு போயுள்ளனர். நியாயமே அற்று நடத்தப்பட்ட இந்த படுகொலையானது தமிழின ஆன்மாவில் அழிக்க முடியாத வடுவை ஏற்படுத்தி நிற்கின்றது.

எப்போதும் அமைதியை நாடி நிற்கிற தமிழர்கள் மீது எதற்காக இவ்வாறு வன்முறைகள் இழைக்கப்படுகின்றன என்றுவேதனையுற வைக்கிறது.

இந்த மனிதகுலப்படுகொலையின் பின் உள்ளோர் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

அது ஒன்றே நீதியின் இருப்பை வெளிக்காட்டி பிராந்தியத்தின் அமைதியை நீண்ட காலம் காக்க வல்லது என அதில் குறிப்பிட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மதவாதத்தைத் தூண்டும் அரசியல் கூட்டங்களுக்குத் தடை

(கொழும்பு)

இனவாத அல்லது மதவாத அடிப்படையில் நடத்தப்படும் அரசியல் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இனவாதத்தை அல்லது மதவாதத்தை தூண்டும் வகையில் கூட்டங்களை நடத்தும் தனிப்பட்ட நபர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் தரப்பினரை கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், முகநூல் (Facebook) போன்ற சமூக வலைத்தளங்களில் இனவாத அல்லது மதவாத அடிப்படையில் கருத்துக்களை வெளியிடுவோரை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அவதூறு ஏற்படும் வகையில் முகநூல் ஊடாக பிரசாரத்தில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேபோன்று எதிர்காலத்தில் இனவாத மற்றும் மதவாத அடிப்படையில் செயற்படும் நபர்கள் தண்டிக்கப்படுவர்.

இந்த நடவடிக்கையானது கடும்போக்குவாத அமைப்புக்கள் தனிப்பட்ட நபர்கள் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு கடுமையான வரையறைகளை ஏற்படுத்தக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இன, மத நல்லிணக்கத்திற்கு எதிராக குரோத உணர்வுடன் கூடிய கருத்துக்களை வெளியிடும் தரப்பினருக்கு குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




## ஆசிரிய உதவியாளர்கள் அடுத்தவாரம் நிரந்தர சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவர்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனம் கிடைக்கப்பெற்று, ஆசிரிய பயிற்சியை நிறைவுசெய்த அனைவரும் அடுத்த வாரம் நிரந்தர ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டு புதிய வேதனம் வழங்கப்படும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை நிறைவடைந்து பரீட்சைப் பெறுபேறு வெளியானதும் ஆசிரிய கலாசாலையால் வழங்கப்படும் பெறுபேற்றுப் பத்திரங்களை வைத்து அந்தந்த கல்வி வலயங்கள் மத்திய கல்வி அமைச்சின் உறுதிப்படுத்தலுடன் உள்ளீர்ப்பைச் செய்து வந்தன. அதற்கு உதாரணமாக தீவகக் கல்வி வலயத்தில் கடந்த காலங்களில் ஆசிரியப் பயிற்சி நிறைவு செய்தவர்களின் பெறுபேற்றுப் பத்திரங்களை அப்போது இருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் நேரடியாக கல்வி அமைச்சுக்குக் கொண்டுசென்று உறுதிப்படுத்தி உடனடியாகவே உள்ளீர்பையும் செய்து, வேதனத்தையும் வழங்கினார். அதனை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய கல்வி வலயங்களும் உள்ளீர்ப்பைச் செய்தன.

ஆனால் ஆசிரிய உதவியாளர் நியமனம் கிடைத்து குறைந்த வேதனத்துடனும், அதிக செலவீனத்துடன் கடமையாற்றும் பயிற்சி முடித்து பரீட்சைப் பெறுபேறு கிடைக்கப்பெற்ற ஆசிரியர்களின் உள்ளீர்ப்பு இதுவரை நடைபெறவில்லை என்பதனை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம் எடுத்து விளக்கிய பொதுச் செயலாளர் முன்னைய காலங்களில் நடைமுறைப்படுத்திய விடயங்களை எடுத்துக்கூறி உடனடியாக அவ்வாசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்து வேதனத்தை வழங்குமாறு கோரியிருந்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரின் உள்ளீர்ப்புக் கடிதங்கள் ஆயத்தமாக இருப்பதாகவும் மத்திய கல்வி அமைச்சிடம் இருந்து உறுதிப்படுத்தல் கிடைத்ததும் அடுத்த வாரம் அவை நடை முறைப்படுத்தப்படும் என உறுதியளித்துள்ளார். அத்தோடு மத்திய கல்வி அமைச்சு அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளார் என அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பௌத்த மதத்தின் கோட்பாடுகளை ஞானசார தேரர் பின்பற்ற வேண்டும்

### பீல்ட் மார்ஷல் சரத் தெரிவிப்பு

**(கொழும்பு) பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பௌத்த மத கோட்பாடுகளை பின்பற்ற வேண்டுமென ஜனநாயக கட்சி தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பதவி விலகுமாறு கோரும் அதிகாரம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஊடகத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதுகெலும்பற்ற தலைவர் எனவும் அவர் இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போன்று நல்லாட்சி அரசாங்கம் எவரையும் பழிவாங்காத காரணத்தினாலேயே ஜனாதிபதியை, ஞானசார தேரர் இவ்வாறு விமர்சனம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக ஞானசார தேரரும், அவரது அமைப்பினரும் எவ்வாறான நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து ஞானசார தேரர் எதுவும் குறிப்பிடவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சு.க. நடவடிக்கையில் ஜனாதிபதி அதிருப்தி!

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட 400 பில்லியன் ரூபாய்களுக்கான திறைசேரி உண்டியல் பிரேரணையின் போது எதிர்த்து வாக்களித்தமை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயத்தின் பின்னர் இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பு ஒன்றின் போதே இந்த அதிருப்தியை அவர் வெளியிட்டுள்ளார்.

இந்த செயலால் ஆகப்போவது ஒன்றும் இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது முதலாவது உரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிகழ்த்த வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

இதனால் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவை பெற்றுக்கொள்ள உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுத்தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலை போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து போட்டியிட வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை ஒன்றை முன்வைத்ததுடன், இது தொடர்பில் எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில் நடைமுறை தேசிய அரசாங்கத்தின் முரண்பாடுகள் குறித்து கொழும்பில் உள்ள இராஜதந்திர தரப்புக்களில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 19ம் திருத்தச் சட்டத்தில் சிறுபான்மை உரிமைகள்

19 ஆவது திருத்த சட்ட விவாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் போது, சிறுபான்மையினர் சம்பந்தமான விடயங்களுக்கு சிறுபான்மை கட்சிகள் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் இதனைத் தெரிவித்துள்ளார்.

முதலாவது பல்கலைக்கழக மலையக சமூக தேசிய மகாநாடு ஹற்றன் பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது. இதில் உரையாற்றும் போது அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 19 ஆவது திருத்த சட்டம் வரலாற்று முக்கியத்துவம் பெறும் ஒன்றாக அமையப்போவதாக கூறியுள்ளார்.

இதன்போது சிறுபான்மை தமிழ், முஸ்லிம் வட கிழக்கு மலையக கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் நின்று செயற்பட்டு எமக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# எனது உயிரைத்துறக்க நேரிட்டாலும் ஐ.தே.கட்சியின் வாலாக மாட்டேன்

### பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

பதவியிலிருந்து நீக்கினாலும், நான் செத்தாலும் ஐக்கிய தேசிய கட்சியின் வாலாக மாட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

செய்தி சேவை ஒன்றிற்கு நேற்று முன்தினம் இரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எனக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து என்னை நீக்கிவிட்டதாகவும், மத்திய செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக நான் செயற்படுவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஒன்றிணைந்த பின்னர் தமக்கு தேவையில்லை என எண்ணும் உறுப்பினர்களை வேட்டையாடும் முதற் கட்டமே எனது பதவி நீக்கம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




அமைச்சர், உறுப்பினர் பதவிகள் இல்லை என்றாலும் நாடு, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அப்பாவி மக்களுக்கு துணையாக நான் இருப்பேன் எனவும் செத்தாலும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைய மாட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1115



## சிறந்த பக்தி!

"நாம் நம் வீட்டைத் தவிர வேறு எங்கும் சாப்பிடக்கூடாது என்று தெரியாதா உனக்கு?" என்று கூச்சலிட்டான்.

"அண்ணா? காலையிலிருந்து சாப்பிடாததால் எனக்கு பயங்கரப் பசியாயிருந்தது. அதனால் அங்கே சாப்பிட்டுவிட்டேன்.

தவிர சூரிய ஒளி, காற்று, தண்ணீர் ஆகியவை வகுப்பு வேறுபாடு பார்க்கின்றனவா? நமது உயிர் காத்து உடல் வளர்க்கும் உணவும் அதுபோல்தான்! அதை யார் அளித்தாலும் உண்ணலாம்! தவறில்லை!" என்று கண்ணன் கூறவும், ராமநாதனின் கோபத்தீயில் எண்ணெய் விட்டது போல் ஆயிற்று.

"நீ ஒரு மகாபாவி! இன்று முதல் நீ எனக்குத் தம்பியில்லை! போ, வீட்டை விட்டு!" என்று ராமநாதன் காட்டுக்கத்தலாகக் கத்த, கண்ணன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு அண்ணன வீட்டை விட்டு வெளியேறினான்.

அண்ணனின் வீட்டிற்கு அருகிலேயே மற்றொரு வீட்டைக் கட்டிக் கொண்டு கண்ணன் வசித்து வரத் தொடங்கினான்.


ஆனால் அவன் தன் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவில்லை. சாதி, மத பேதம் பார்க்காமல் வீடு தேடி வருபவர்கள் அனைவருக்கும் உணவு அளித்தான்.

திடீரென, தர்மபுரியில் மழை பெய்யத் தொடங்க, தொடர்ந்து பல நாடகள் மழை நீடித்தது. பல ஏழைக்ளின் குடிசைகள் சேதமாகின.

வீட்டை இழந்த ஏழைகள் அனைவரும் கண்ணன் வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கையில், திடீரென ராமநாதன் வீடு முழுவதும் இடிந்து விழுந்தது.

ராமநாதனும், அவன் மனைவியும் பூஜை செய்து கொண்டு இருந்த அறை மட்டும் தப்பியது. ஆனால், கண்ணன் வீட்டிற்கு எந்த சேதமும் உண்டாகவில்லை.

அதைக்கண்டு கோபமுற்ற ராமநாதன் தான் வழிபடும் தேவியிடம், "தேவி! உனக்கு தினமும் மணிக்கணக்காக பூஜை செய்கிறேன். அப்படிப்பட்ட என் வீட்டை இடித்துவிட்டாய்! ஆனால், ஒரு போதும் பூஜை செய்யாதவனான கண்ணனின் வீடு சேதமடையவில்லை. இது ஏன்?" என்று முறையிட்டான்.



உடனே, அவன் பூஜை செய்யும் தேவி பேசத் தொடங்கினாள். "நீ என்னுடைய பக்தன் தான்!

ஆனால் ஆசார, அனுஷ்டானங்கள் என்ற பெயரில் ஏழை மக்களை ஒதுக்கி வைத்தாய்! உன் தம்பி என்னை பூஜை செய்வதில்லையே தவிர, என்னை மனதால் வழிபடுகிறான்.

நீ என்னை இந்த விக்கிரகத்தில் மட்டும் காண்கிறாய் அவனோ ஒவ்வொரு உயிரிலும் காண்கிறான். தவிர, அவன் வீட்டில் இப்போது நூற்றுக்கணக்கான ஏழைகள் தங்கி உள்ளனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டி, அந்த வட்டை இடியாமல் காப்பாற்றினேன. உன வீடு இடிந்ததே தவிர, உன்னையும், உன் மனைவியையும் காப்பாற்றி இருக்கிறேன்" என்றாள்.

தேவியின் சொற்களைக் கேட்ட ராமநாதனின் மனம் மாறியது. "தேவி! இன்று நான் உண்மையை உணர்ந்தேன். இனி, என் தம்பியைப் போல் நானும் சேவை செய்வேன்!" என்று கூறி தேவியை வணங்கினான். (முற்றும்)

## 04.2015 13 இன்றைய நாளின் முன்னைய பதீவுகள்

- 1111 - ஐந்தாம் ஹென்றி புனித ரோம் பேரரசின் மன்னனாக முடி சூடினான்.
- 1605 - ரஷ்யாவின் சார் மன்னன் பொரிஸ் குடுனோவ் மரணமானான். இரண்டாம் ஃபியோ தர்சார் மன்னனானான்.
- 1829 - பிரித்தானிய நாடாளுமன்றம் உரோமன் கத்தோலிக்கர்களுக்கு மதவுரிமை அளித்தது.
- 1930 - மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகதிற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாத யாத்திரை தொடங்கப் பட்டது.
- 1939 - இந்தியாவில் இந்திய செம்படை என்ற இராணுவ அமைப்பு பிரித்தானியர்களுக்கு எதிரான ஆயுதப்போராட்ட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.
- 1941 - ஜப்பானுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அணிசேரா உடன்பாடு எட்ப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் கார்டெலகான் என்ற இடத்தில் ஆயிரம் போர் மற்றும் அரசியல் கைதிகள் நாசிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1954 - காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார்.
- 1970 - அப்பல்லோ 13 விண்கலத்தில் ஒட்சிசன் தாங்கி வெடித்தது.
- 1975 - லெபனானில் 27 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1979 - இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1997 - டைகர் வூட்ஸ் கோல்ஃப் மாஸ்ரர்ஸ் வென்ற இளம் வீரரானார்.
- 2012- வட கொரியா ஏவிய ஊனா-3 என்ற ஏவூர்தி வானில் வெடித்துச் சிதறியது.


### பிறப்புகள்

- 1743 - தோமஸ் ஜெபர்சன், மூன்றாவது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1826)
- 1906 - சாமுவேல் பெக்கெட், நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் எழுத்தாளர் (இ. 1989)
- **1930 - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தமிழ்த திரைப்படப் பாடலாசிரியர் (இ. 1959)**
- 1934 - டேம் ஜேன் குட்டால், சிம்பன்சி பற்றி ஆராய்ந்த ஆங்கிலேயப் பெண்மணி
- 1939 - சீமுஸ் ஹீனி, நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் எழுத்தாளர்
- 1941 - மைக்கல் பிரெளன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.
- 1949 - கிறித்தபர் ஃகிச்சின்சு, அமெரிக்க எழுத்தாளர், ஊடகவியலாளர்
- 1963 - காரி காஸ்பரோவ், ரஷ்ய சதுரங்க ஆட்டக்காரர்.
- 1979 - பேரன் டேவிஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள்

- 1605-பொரிஸ் குதுனொவ், ரஷ்யப் பேரரசன் (பி. 1551)

### பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்



தமிழ் நாடு மாநிலம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள சங்கம் படைத்தான் காடு என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோருக்கு இளைய மகனாக 13.04.1930 இல் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர் ஆவார். எளிமையான தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியது இவருடைய சிறப்பாகும். இவருடைய பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

பள்ளிப்படிப்பு மட்டுமே கற்க முடிந்த கல்யாணசுந்தரம் திராவிட இயக்கத்திலும், கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய துணைவியார் பெயர் கௌரவாம்பாள். 1959-ஆம் ஆண்டு இவர்களுடைய குழந்தை குமரவேல் பிறந்தது. அதே ஆண்டில் (08.10.1959) இவர் அகால மரணம் அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

104

### நடிப்புப் பயிற்சி

பிலிம் இன்ஸ்டிடியூட்டிலிருந்து நடிப்புப் பயிற்சிக்கு விளம்பரம் வந்தவுடன், வேறொரு நாடகத்தில் இருந்த என்னை அவசர அவசரமாக நடராஜ் ஸ்டூடியோவுக்கு அழைத்துப்போய் போட்டோ எடுத்தான். முதல் தடவையாக என் உருவத்தை அவ்வளவு பெரிய சைசில் பார்த்தேன்.


மூன்றுவிதமான போஸ்களை அவனே சொல்லி புகைப்படம் வந்ததும் என்னைப் பாராட்டி பிலிம் இன்ஸ்டிடியூட்டில் எப்படியாவது சேர்ந்துதான் ஆகவேண்டும் என்று சென்னைக்கு அனுப்பி வைத்தான்.

'பிலிம் இன்ஸ்டிடியூட்டில் படிக்கணும்னா பணம் வேண்டுமே என்ன செய்யறது?' என்றேன்.

'என்னால் முடிந்த உதவியை உனக்குச் செய்கிறேன். நீ இப்படியே இருந்தால் டிரைவரா, கண்டக்டரா மட்டும்தான் இருப்பாய். வருடத்துக்கு ஒரு தடவை இன்கிரிமென்ட், டி.சி., செக்கிங் இன்ஸ்பெக்டர் அவ்வளவுதான். நமக்குள் யாராவது ஒருவன் முன்னுக்கு வந்தால் நமக்குப் பெருமை. நம்ம கூட இருந்தவன் இவ்வளவு நல்லா இருக்கான்னு சொல்லிக்கலாம்' என்றான்.

நான் பிலிம் இன்ஸ்டிடியூட்டில் சேர்ந்த பிறகு, மாதத்துக்கு 120 ரூபாய் அனுப்பி விடுவான். அதாவது அவன் வாங்கிய 320 ரூபாய் மாதச் சம்பளத்திலிருந்து! நான் பெங்களூரிலீருந்து சென்னைக்கு இன்ஸ்டிடியூட்டில் படிக்க வரும்போது அவன் கழுத்தில் போட்டிருந்த செயினைக் கழற்றி என் கழுத்தில் அணிவித்து, 'போட்டுக்கோ! உனக்கு உபயோகமாக இருக்கும்'னு சொன்னான்.

'இது என்ன தாயத்தா உபயோகம் ஆகும்ன்னு சொல்றே!' கிண்டலாகக் கேட்டேன். செயின் போட்டா நல்லா இருக்கும்னு போட்டுவிட்டான்.



நான் இன்ஸ்டிடியூட்டில் படிக்கிறபோது ராஜ்பகதூர் அனுப்புகிற பணம், அப்பப்ப அண்ணன் அனுப்புகிற பணமெல்லாம் இருபதாம் திகதிக்குள் தீர்ந்து விடும். அப்புறமென்ன! தெரியாத ஊரில், தெரியாத மக்களிடம் கடன் கேட்க முடியுமா? அதனால் செயினை இருநூறு ரூபாய்க்கு அடகு வைத்து விடுவேன். பணம் வந்தவுடன் செயினை மீட்பேன். இப்படியே ஒவ்வொரு மாதமும் நண்பன் சொன்னது போல் செயின் உபயோகமாக இருந்தது.

அபூர்வ ராகங்கள், மூன்று முடிச்சு படங்களில் அந்த செயின் போட்டு நடித்தேன். பிறகு ஒரு படத்தின் சண்டைக் காட்சியின்போது, நட்புக்கு அடையாளமான அந்த செயின்தொலைந்து போய்விட்டது.

'மூன்று முடிச்சு' படத்தைப் பார்த்துவிட்டு மிகவும் பாராட்டினான் ராஜ்பகதூர். அவனே நடித்த மாதிரி அவன் முகத்தில், பேச்சில் ஒரு சந்தோஷம் இருந்தது. அதன் பிறகு நான் பிசியாகிவிட்டேன். நேரம் கிடைக்கும்போது பெங்களூருக்கு செல்வேன்.

ராஜ் வீட்டுக்குப்போவேன். நான் கண்டக்டராக இருந்தபோது அவன் வீட்டில் அவனுக்கென்று இருக்கும் அறையில்தான் நான் தூங்குவேன். சென்னையிலிருந்து எப்போது போனாலும் அவன் வீட்டில் அந்த அறையில் உட்கார்ந்து பேசுவோம்.


என்னைப் பற்றியும், என் உடல் நிலைப் பற்றியும் அதிகம் விசாரிப்பான். நான் வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்பதற்காக பல விதங்களில் உதவி செய்து ஊக்கமூட்டிய ராஜ்பகதூருக்கு உதவி செய்ய நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். அவனிடம் கேட்டபோதெல்லாம், 'இல்லேப்பா. எனக்கு என்ன தேவையோ அதை ஆண்டவன் கொடுத்திருக்கிறார். அப்படித் தேவைப்படும்போது உன் னிடம் வருகிறேன், செய்' என்று கடந்த பல வருடங்களாக என்னி டம் எந்த உதவியும் கேட்கவில்லை.

ராஜ்பகதூருக்குத் திருமணம் நடந்தபோது நானே அவனை வற்புறுத்தி ஒரு வீடு வாங்க உதவினேன். இப்போது ரொம்ப நிம்மதியாக இருக்கிறான்.

முன்பெல்லாம் அடிக்கடி சென்னைக்கு வந்து என்னைப் பார்க்க வருவான். நான் ஷூட்டிங் போய் விடுவதால் வருவதைக் குறைத்துக்கொண்டான். எனக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டபோது பார்க்க வந்திருந்தான்.

'உன் உடலை மூலதனமாக்கி இவ்வளவு பணம் சம்பாதிச்சு, அதுக்கப்புறம் வாழ்க்கையை அனுபவிக்க உடம்பு சௌகரியமாக இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-115

...ஏ கூப்பிடுங்கடா அவன, இல்ல உள்ள வந்து கொல்லுவோம்.

ஏம்ப்பா இந்தத் தவ்வுத் தவ்வுறீகளே, கொலக்குத்தமா ஆகிப்போச்சு?

ஒன்வீட்டு ஆட்ட நீ வெட்டிக்கிட்டா அது கொலை இல்ல; என் வீட்டு ஆட்ட நீ வெட்னா அது கொலதான்.

கிறீச்ன்னு தொறக்குது தலவாசக் கதவு.

என்னமோ விருந்துக்கு வந்தவுகள விசாரிக்க வந்த மாதிரி சத்தமில்லாம நடந்து வாராரு சடையத்தேவரு. அவர் வழக்கமா வெத்தல இடிக்கிற கல்லு மேல தன்ன இடுப்புக்குக் கீழ கொஞ்சங் கொஞ்சமா எறக்கி வச்சு உக்காந்துக்கிட்டாரு.

பையில இருந்த பாக்க எடுத்து வெத்தல ஒரல்ல போட்டு டொக்கு டொக்குன்னு தட்டிக்கிட்டே கேக்கிறாரு: ஆடு சுட்டுத் திண்டவன் என் மகன்தான்னு சாட்சி இருக்கா?

சாட்சி வேணுமா சாட்சி... வரச்சொல் ஒம் மகன; வகுத்த வகுந்து உள்ள யிருக்குற ஈரல எடுத்து இந்தான்னு காமிக்கிறோம்.

இருக்கலாம்... ஈரல்கூட இருக்கலாம். அது ஒங்க வீட்டு ஆடுன்னு எழுதியிருக்குமா ஈரல் மேல.

யப்பா சடையத்தேவா! நீ வாய் பெருத்த ஆளு; வக்கீல் மாதிரி பேசுவ. சாட்சி இல்லாம நியாயம் கேக்க வர மாட்டமப்பா உருமாப்பெருமாத்தேவரு பொறுப்பா பதில் சொல்ல, என்ன சாட்சின்னு சாணியில விழுந்த மறுமாதத்த எடுக்குற மாதிரி சடையத் தேவரு அலட்சியமாக் கேட்கவும் கடுப்பாகிப் போனாரு காவக்காரச் சக்கணன்.

கொண்ணவாயன அடிச்சு உப்பந்திரிசு ஓடையில போட்டது, மாடுகளப் புடிச்சு ஓடசாலி மரத்துல கட்டி வச்சது, கருவாச்சி கெடாய நக்கிலிச்சான் பாறையில வெட்டிப் பாறைக்கறி போட்டது எல்லாத்துக்கும் கண்ல பாத்த சாட்சி இருக்கு. என்னமோ நாங்கள்லாம் கேணப்பய [illegible] மாதிரி கிறுக்குக் [illegible] பெருசு.



இப்ப எல்லோரும் கூடு எதுக்கு வந்திருக்கீக?

தண்டம் வாங்க வந்திருக்தோம். உள்ளூர்ப் [illegible] சொல்ல, தண்டத்த நீங்க வாங்கிக்கங்க, அவன் தலைய நாங்க வாங்கிக்கிறோம்ன்னு மொதலகம்பட்டி ஆளுகள்ல ஒருத்தன் எருமைத் தொண்டையில கரகரன்னு பேச, எவன் தலையடா வாங்குவீகன்னு வீச்சரிவாளோட வெளிய தவ்வி வந்துட்டான் கட்டையன்.

அதுக்குள்ள அவன் கைத் தடிகளுக்குத் தகவல் போயி வேல்கம்பு வெட்டரிவாளோட வந்து குமுஞ்சுபோனாக.

அவன் ஒண்ணு சொல்ல. இவுக ஒண்ணு சொல்ல, அவன் அரிவாள எடுக்க இவுக சூரிய எடுக்க வோணாம்டா வெட்டுப்பலி குத்துப்பலி ஆகிப் போச்சுன்னா ஏழு தலமொறைக்கும் எந்திரிக்க முடியாதுடான்னு பெருசுக சத்தம்போட்டு அமத்த, கடைசியில பதிமூணே கால்ரூவா தண்டத்தோட முடிஞ்சுபோச்சு பஞ்சாயத்து.

காளியம்மன் கோயில் வாசல்ல மொனையில்லாத மம்பட்டி, மூக்கில்லாத கடப்பாரைய வச்சுக் கண்ணீரு ஒழுக ஒழுகக் குழிதோண்டிக்கிட்டிருக்கா கருவாச்சி.

கால்சட்ட வழியா ஒண்ணுக்குப்போயிக்கிட்டு மூக்கு ஒழுக அழுது நிக்கிறான் சின்னப்பைய அழகுசிங்கம்.

பொணங் கெடக்குற மாதிரி அட்டத்துலேயே கெடக்கு பூலித்தேவன் தோலு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராவது இந்திய நாட்டின் உரிமை







## பிரதமர் மோடி உரை

(பாரிஸ்)

**உலக அமைதிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கிய 'இந்தியா, ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் ஆவது அதன உரிமையாகும்' என்று பிரதமர் மோடி உறுதியாக தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸ் நாட்டில் 4 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ள பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் இரவு, பிரான்ஸ்வாழ் இந்திய மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

பிரதமர் மோடி மேலும் உரையாற்றுகையில்,

முதலாவது உலகப்போரில இருந்தும், ஐ.நா. அமைப்பு அமைக்கப்பட்ட பின்னரும் இந்தியா உலகின் அமைதிக்காக பெரும் தியாகங்களை செய்து உள்ளது. உலகம் முழுவதும் அமைதிப் படைக்கு இந்தியா பெரும் பங்காற்றியது. இப்போது, இந்தியா ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவி கேட்டு வருகிறது.

இப்போது, அமைதிப்படையின் நடவடிக்கைக்கு மதிப்பளிக்க வேண்டிய நேரம் என்பதை உலக நாடுகளுக்கு வலியுறுத்துகிறேன்.

மகாத்மா காந்தி மற்றும் கவுதம புத்தர் ஆகியோரது உணர்வுகளின் உரிமையாகும். இந்தியா கெஞ்சிய நாட்கள் எல்லாம் போய்விட்டது. தறபோது எங்களுடைய தேசம அதனது உரிமையைத்தான் கேட்கிறது என்று தெரிவித்தார். பிரதமர் மோடி உரையை கேட்க அங்கிருந்த 3000 இந்தியர்களும் "மோடி, மோடி" என்ற கோஷத்தை எழுப்பினர். ஐ.நா. பாதுகாப்பு சபையில் தனது 70ஆவது ஆண்டு தினத்தை கொண்டாடும் போது இதனை நினைவில் கொள்ளும் என்றும் பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.

இந்தியாவை முன்னெடுத்து செல்லவே பிரான்ஸ் வந்துள்ளதாகவும், வளர்ச்சிப் பாதையில் பிரான்ஸ் நாட்டை இந்தியா பின்னுக்கு தள்ளும்.

இந்தியா அமைதியை விரும்பும் நாடு, இந்தியாவில் விரைவில் வறுமை ஒழிக்கப்படும் என்றும் பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்தார். முன்னதாக, முதல் உலகப்போரின்போது, பிரான்சில் வீர மரணம் அடைந்த 10 ஆயிரம் இந்திய வீரர்களின் நினைவாக லில்லி நகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னத்தை பார்வையிட்ட பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மாவோயிஸ்ட்டு தாக்குதலில் சத்தீஸ்கரில் 7பொலிஸார் பலி

(சத்தீஸ்கர்)

சத்தீஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய திடீர் தாக்குதலில், சிறப்பு அதிரடிப் படை பொலிஸார் (எஸ்.டி.எஃப்) 7 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 12 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலரது நிலை கவலையளிக்கும் வகையில் இருப்பதால், பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதுதொடர்பாக பொலிஸ் கூடுதல் தலைமை இயக்குநர் (நக் ஸல் எதிர்ப்பு அதிரடிப்படை) ஆர்.கே. விஜ் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் தெரிவிக்கையில்,

சுக்மா மாவட்டம், டோர்னாபால் - சின்டகுவா இடையேயான பீட்மேல் வனப் பகுதியில் நக்ஸலைட் எதிர்ப்பு அதிரடிப்படை பொலிஸார் 70 பேர் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். அப் போது அவர்களை சுமார் 300 மாவோயிஸ்டுகள் துப்பாக்கிகள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் நாலாபுறமும் சுற்றிவளைத்து திடீர் தாக்குதல் நடத்தினர்.

சுதாகரித்துக் கொண்டு அதிரடிப்படை பொலிஸாரும் மாவோயிஸ்டுகளுக்கு பதிலடி கொடுத்தனர்.

இதையடுத்து இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது.

இந்த துப்பாக்கிச் சண்டை சுமார் 2 மணி நேரம் வரை நீடித்தது.

இந்தச் சண்டையில், கமாண்டர் சங்கர் ராவ், தலைமை காவலர் ஹோஹித் சோடி உட்பட 7 பொலிஸார் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து பலியாகினர். மேலும 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள், 2 ஹெலிகொப்டர்கள் மூலமாக ஜகதால்பூர், ராய்ப்பூரில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். சண்டையில் உயிரிழந்த பொலிஸாரின் உடல்கள், காங்கர்லங்கா என்னுமிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (இ-5)

# அசாமில் குண்டுவெடிப்பில் ஒருவர் உயிரிழப்பு

## 3பேர் படுகாயம்

அசாம் குண்டு வெடிப்பில் வியாபாரி ஒருவர் உயிரிழந்தார். 3 பேர் காயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அசாம் மாநிலம் உதால்குரி மாவட்டம் ராவ்டா பகுதியில் உள்ள ஒரு சந்தையில் நேற்றுக்காலை கையெறி குண்டு ஒன்று திடீரென வெடித்து சிதறியது. இந்த குண்டு வெடிப்பில் ஒருவர் உடல் சிதறி பலியானார். 3 பேர் படுகாயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள மீட்கப்பட்டு வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. குண்டு வெடிப்பில் பலியானவர் ராம் சந்திர பர்மான் என்பதும், அதே பகுதியில் பழைய பொருட்களை விற்பனை செய்து வந்ததும் தெரியவந்தது. சம்பவ இடத்திற்கு உயர் பொலிஸ் அதிகாரிகளும், இராணுவத்தினரும் விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். (இ-5)

பாரதச் செய்தி

# இந்திய மாணவர்களுடன் செல்பி எடுத்தார் பிரதமர்



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பிரான்ஸ் பயணத்தின் இரண்டாவது நாளான நேற்று முன்தினம், டவ்லவுசில் உள்ள பிரெஞ்சு விண்வெளி நிறுவனத்தை அவர் பார்வையிட்டார். அப்போது தேசிய விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள இந்திய மாணவர்கள் "மோடி" "மோடி" என்று மகிழ்ச்சியில துள்ளிக் குதித்தபடி பிர தமர் நரேந்திர மோடியை சூழ்ந்து கொண்டனர்.

அப்போது மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க அவர்களுடன் புன்னகைத்தபடி மோடி செல்பி எடுத்துக் கொண்டார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டரில் "தேசிய விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள இளைய நண்பர்களுடன் செல்பிகளை எடுத்துக் கொண்டேன். நாங்கள் அட்டகாசமான செல்பியை எடுக்க முயற்சித்தோம்" என்று டுவிட் செய்தார். (இ-5)

# போர்விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்தால் வழக்கு!

## சுப்பிரமணியம் சுவாமி எதிர்ப்பு

(டில்லி)



பிரான்ஸ் நாட்டிடம் இருந்து ரபேல் போர் விமானங்களை வாங்குவதற்கு பா.ஜனதா தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சுவாமி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு காலத்தில் ரபேல் போர் விமானங்களை வாங்குவது தொடர்பான ஒப்பந்தத்தை பிரதமர் மோடி முன்னெடுத்து செல்லக் கூடாது. இந்த விமானம் எரிபொருள் சிக்கனமற்றது. மற்றப் போர் விமானங்களை விட இவை லிபியா, எகிப்து நாடுகளில் மிகவும் மோசமான செயற்றிறனை வெளிப்படுத்தின.

இதனால் இந்த விமானத்தை வாங்குவதற்கு எந்த நாடுகளும் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட சில நாடுகளும் பின்னர் அதை இரத்து செய்துவிட்டன.

பிரதமர் மோடி எந்த நிர்ப்பந்தத்தின் காரணமாகவும் ரபேல் விமானங்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்தால், உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்து அதை தடுப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசில் அங்கம் வகித்தால் எதிர்க்கட்சி இல்லாமல் போய்விடும்

## ஜே.வி.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

**தேசிய அரசாங்கமொன்றில் அங்கம் வகிக்கும் சாத்தியங்கள் எதுவும் கிடையாது எனவும் தேசிய அரசாங்கத்தில், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து கொண்டு செயற்பட்டால், எதிர்க்கட்சி என்று ஒன்று இல்லாமல் போய்விடும் என ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மே மாதம் முதல் வாரம் வரையில் நாடாளுமன்ற அமர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும்.

19 ஆம் திருத்தச் சட்டம் போன்ற முற்போக்கான ஓர் சட்டமொன்றைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாவிட்டால், தற்போதைய நாடாளுமன்றின் ஊடாக வேறும் ஆக்கபூர்வமான யோசனைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

நாட்டுக்குத் தேவையான அரசியல் அமைப்பை புதிய நாடாளுமன்றமேனும் கொணடுவர வேண்டும்.

ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைகக்கப்படாவிட்டால் எப்போது நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதனை ஜனாதிபதி முன் கூட்டியே அறிவிக்க வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க சிங்கள ஊடகமொன்றுக்குத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி, மூத்தநயினார்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் தேர்த திருவிழா நாளை 14 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். அதே வேளை மறுநாள் 15 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 | 40 | 50-60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 60 | 50 | 30 |
| தக்காளி | 80 | 80 | 50 | 60 | 40-50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 60 | 50 | 30-50 | 40 |
| கரட் | 180 | 120 | 100 | 140 | 120 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 90 | 100 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 40 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 80 | 100-120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 50 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 50 | 100 | 60-70 | 80 |
| லீக்ஸ் | 250 | 200 | 150 | 180 | 140 | 140 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 80 | 50 | 40 |
| கறிமிளகாய் | 200 | 120 | 130 | 100 | 70-100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 | 400 | 400-500 | 500 |
| போஞ்சி | 200 | 100 | 100 | 120 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 40 | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 | 30 | 25-30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 40 | 20 | 40 | 60 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## கொம்பனித்தெருவில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து தரிப்பிடத்தில் இரண்டு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி, இறுதியில் கொலையாக மாறியுள்ளது.

கொழும்பு 2 வொக்ஸ வோல் வீதியைச் சேர்ந்த 30 வயதான நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 45 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 340

Search for people, places and things Nagendram Home

செல்வா ராஜ்




மாதுஷன் சிவராசா




லோஜி லோஜிதா




எட்வின் டேவிட்




வேணு. வேணுசன்




சாலினி பத்மநாதன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்காவின் அடுத்த நகர்வு?

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பிந்திய நிலையைக் கண்காணிப்பதிலும், இலங்கை தொடர்பான தனது நிலைப்பாடு நடுநிலையானது என்பதை வெளிப்படுத்துவதிலும் அமெரிக்கா இப்போது ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளது.

அண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் தொழிலாளர் விவகாரம் தொடர்பான உதவி இராஜாங்கச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவர் கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளை மதிப்பீடு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

அதுபோலவே வரும் ஜூன் மாதம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியும் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவை இலங்கை மீதான அமெரிக்காவின் ஆர்வத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை.

உதவி இராஜாங்கச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி தனது இலங்கைப் பயணத்தின் போது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரங்கள் தொடர்பாக, பரந்துபட்டளவு கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

அதன் ஒரு கட்டமாக அவர் போரில் உயிரிழந்த இரண்டு தரப்பினருக்காகவும் முள்ளிவாய்க்காலில் மலர் அஞ்சலியும் செலுத்தினார். போர் முடிந்து, கிட்டத்தட்ட 6 ஆண்டுகளாகப் போகின்ற நிலையில், இதுவரை இலங்கை வந்த அமெரிக்க உயர் அதிகாரிகள் எவரும் போரில் இறந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்த முனையவில்லை.

ஆனால், இப்போது அமெரிக்கா சார்பில் ரொம் மாலினோவ்ஸ்கி அஞ்சலி செலுத்தியிருக்கிறார். முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் அவ்வாறு அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும் வாய்ப்பு இல்லாதது ஒரு காரணமாகக் கூறப்படலாம்.

என்றாலும், தற்போதைய நிலையில் அமெரிக்கா சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டதற்கு முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் செய்ய முடியாமல் போனதை மட்டும் ஒரு காரணமாகக் குறிப்பிட முடியாது.

அதற்கும் அப்பால், ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையைப் பிற்போட்ட விவகாரத்தில் தமிழர்களுக்கு அநீதி இழைத்து விட்டதான உறுத்தல் அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

அல்லது இந்த விவகாரத்தினால் அமெரிக்கா மீதான நம்பிக்கையை தமிழர் தரப்பு இழந்து போய் இருப்பதை உணர்ந்து கொண்டு தமிழர் மத்தியில் தன் மீதான நம்பகத் தன்மையை மீள் சமநிலைப்படுத்த முயன்றிருக்கலாம்.

முள்ளிவாய்க்கால் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அமெரிக்கா தெரிவு செய்தது தமிழர்களின் இதயங்களைத் தொடுவதற்கான ஒரு முயற்சியாகவே பார்க்கப்பட வேண்டும்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாத அமர்வில், இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அதனை தனது அதிகாரம் செல்வாக்கு என்பனவற்றைப் பயன்படுத்தி ஆறு மாதங்களுக்குப் பிற்போடச் செய்தது அமெரிக்கா. ஐ.நாவினதும் அமெரிக்காவினதும் இந்த நகர்வு உலகெங்கும் வாழும் தமிழர்கள் மத்தியில் விசனத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியது.

எதிர்காலத்தில், போர்க்குற்ற விசாரணைகள், பொறுப்புக் கூறல் முயற்சிகள் பழைய உத்வேகத்துடன் தொடருமா என்ற கேள்வியையும் எழுப்ப வைத்தது.

அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இலங்கைத்தீவில் தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதிலேயே கவனம் செலுத்தின. இந்த மேற்குலக நலன்சார் நகர்வுக்குள் தமிழர்களின் நலன் நசிபட்டுப் போனது உண்மை. இதனை அமெரிக்கா உணர்ந்திருக்கக் கூடும்.

ரொம் மாலினோவ்ஸ்கி போன்ற அமெரிக்க இராஜதந்திரிகள் தமது பயணங்களின் போதும், கலந்துரையாடல்களின் போதும் இதனை அறிந்து கொண்டிருக்கவும்கூடும்.

இத்தகைய நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வையும் அவநம்பிக்கையையும் களையும் நோக்குடன் அமெரிக்கா செயற்பட எத்தனித்திருக்கலாம்.

ஆனால், முள்ளிவாய்க்காலில் அமெரிக்கா சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்ட விவகாரம் முக்கியமான தொன்றாகவே இருந்தாலும், இது தமிழ் மக்களால் பெரியதொரு விவகாரமாகப் பார்க்கப்பட்டது என்று கருத முடியாது.

ஏனென்றால் அதற்கும் அப்பாற்பட்ட நடவடிக்கையைத்தான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதாவது ஐ.நா. வின் விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டு, அதன் மீதான நியாயமான சரவதேச பொறுப்புக் கூறும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அத்தகையதொரு முயற்சியை ஆரம்பத்தில் முடக்கி விட்டது அமெரிக்கா. வரும் செப்ரெம்பரிலாவது அந்த முயற்சிகள் தொடர்வதை உறுதிப்படுத்திக் கொள்வதைத் தான் தமிழர் தரப்பு எதிர்பார்க்கிறது.

இந்தநிலையில் தனது இலங்கைப் பயணத்தின் முடிவில் ரொம் மாலினோவ்ஸ்கி செய்தியாளர்களைச் சந்தித்த போது அவரிடம், ஜெனிவாவில் வரும் செப்படம்பர் மாதம் இலங்கை குறித்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதற்கு அவர் செப்ரெம்பருக்குப் பின்னர் என்னவென்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

செப்ரெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐ.நா அறிக்கையில் என்ன கூறப்படும் என்று தம்மால் எதிர்வு கூற முடியாது என்றும், அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் ரொம் மாலினோவ்ஸ்கி கூறியிருந்தார்.

இருந்தாலும் செப்ரெம்பருக்குப் பின்னர் கூட, இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில், அமெரிக்கா நடந்து கொள்ளுமா என்ற சந்தேகம் உள்ளது.

ஏனென்றால், அமெரிக்க நலனைகளை இலங்கையில் உறுதிப்படுத்த வேண்டிய தேவை வோசிங்டனுக்கு உள்ளது.

எனவே, சர்வதேச அரங்கில்; இலங்கைக்கு நெருக்கடி கொடுத்து, அதனுடனான உறவுகளை அந்நியப்படுத்த அமெரிக்கா முனையாது.

சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் நகர்வுகளுக்கு இலங்கை முக்கியமானதொரு கேந்திரமாக உள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீன ஆதிக்கத்தை முறியடிக்க இந்தியாவுடன் இணைந்து செயற்படும் அமெரிக்காவுக்கு, இலங்கை சவாலானதொன்றாகவே இருந்து வந்தது.

முன்னைய அரசாங்கத்துக்கும் சீனாவுக்கும் இடையில் இருந்து வந்த நெருக்கத்தினால், அமெரிக்க - இந்திய நலன்கள் பாதிக்கப்பட்டன.

அந்தநிலையைக் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் மாற்றியமைத்து விட்டது.

அந்த ஆட்சி மாற்றத்தில் கூட அமெரிக்காவின் பங்களிப்பு அதிக மாகவே இருந்தது.

மாறியுள்ள இந்தச் சூழலில் தமக்குச் சாதகமான ஒரு அரசாங்கத்துக்கு சர்வதேச அரங்கில், அழுத்தம் கொடுத்தோ நெருக்கடி கொடுத்தோ அந்நியப்படுத்த அமெரிக்கா விரும்பாது.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் மீண்டும் சீனா, ரஷ்யாவை நோக்கி இலங்கை ஓடிவிடும் என்பது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும்.

இதனால் வரும் செப்ரெம்பருக்குப் பின்னர் கூட, இலங்கைக்கு எதிரான பாரிய நகர்வுகள் எதையும், அமெரிக்காவிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

அமெரிக்க இராஜாங்கத திணைக்களத்துக்கு ஐநா வெளியிடப் போகும் அறிக்கையின் உள்ளடக்கம் தெரிந்திருக்கலாம், தெரியாமல் போயிருக்கலாம்.

அதன் உள்ளடக்கம் அமெரிக்காவுக்கு இப்போது தேவையில்லை.

அதாவது அடுத்த நகர்வு குறித்து தீர்மானிப்பதற்கு ஐநா விசாரணை அறிக்கை அமெரிக்காவுக்கு தேவையில்லை. ஏனென்றால் அமெரிக்கா எடுக்கப் போகும் தீர்மானம் அதனைச் சார்ந்த ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை.

ஆனாலும் இலங்கையில் எல்லா மக்களையும் திருப்திப்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா ஆர்வம் காட்டுகிறது.

அதற்காகவே மலர் அஞ்சலி செலுத்தி தான் உங்களின் பக்கம் நிற்கிறேன் என்று காண்பிக்க முயன்றிருக்கிறது.

எவ்வாறாயினும் இதன் உள்நோக்கம் என்ன என்பதை வரும செப்ரெம்பர் மாதம் வெளியாகப் போகும் போர்க்குற்ற விசாரணை அறிக்கை மீதான அமெரிக்காவின் நகர்வில் தெளிவாகவே புரிந்து கொள்ளலாம்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர முன்னணியில் போட்டியிட மகிந்தவுக்கு எவ்வித தடையுமில்லை

**(கொழும்பு) — ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட எவ்வித தடையுமில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அறிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தக் கருத்தை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவர்களின் கூட்டம் ஒன்றின் போது தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களான முன்னாள் அமைச்சர் நால்வர் நீக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்தக் கருத்து ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது. (இ-5)

## அதிகாரம் ரணிலிடம்

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களை தெரிவு செய்யும் பூரண அதிகாரம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி கண்காணிப்பில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் வேட்பாளர்களை தெரிவு செய்யும் பொறுப்பு ரணிலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மிகவும் பொருத்தமான ஓர் குழுவினை நாடாளுமன்ற தேர்தலில் களமிறக்க வேண்டுமென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் தலைவரது விருப்பத்திற்கு அமைய இந்தக்குழு களமிறக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளனர். இதன்படி வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 19ஆம் திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட்டால் ஜனாதிபதியை பிரதமரே கட்டுப்படுத்துவார்

19 ஆம் திருத்தச் சட்டம் அமுல் படுத்தப்பட்டால் ஜனாதிபதியை, பிரதமர் கட்டுப்படுத்தும் சூழ்நிலை உருவாகும் என சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக சுமந்திரன் போன்றவர்களின் நோக்கம் தெளிவாக அம்பலமாகியுள்ளது.

இம்முறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தெற்கில் போதியளவு வாக்குகள் கிடைக்கவில்லை.

வடக்கில் கிடைக்கப்பெற்ற அதிகளவு வாக்குகளின் காரணமாகவே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவானார்.

வடக்கிற்கு ஆதரவாக வடக்கிற்கு அடிமையான ஓர் ஜனாதிபதியாக தற்போதைய ஜனாதிபதியை அடையாளப்படுத்த முடியும்.

திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியை கைப்பொம்மையாக பயன்படுத்திக்கொள்ளவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது. இதன் ஊடாக தங்களது நோக்கங்களை அடைந்து கொள்ள கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

அரசியல் அமைப்பு திருத்தங்களின் ஊடாக நிறைவேற்று அதிகாரத்தை விடவும் நாடாளுமன்றின் பலம் அதிகரிக்கும் நிலைமை ஏற்படும்.

திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் பதவி பெயரளவு பதவியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ-5)

ஒரே நாளில்

## களவு, கொள்ளைகளை நிறுத்திவிட முடியாதாம்

### சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

நாட்டில் இடம்பெற்று வரும் களவு, கொள்ளைகளை நிறுத்தி விட முடியாது என பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மாலம்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் மற்றும் விழுமிய விரோத செயற்பாடுகளை ஒரே நாளில் தடுத்து நிறுத்திவிட முடியாது.

நல்லாட்சியுடன் எதிர்காலம் மாற்றமடையும். 100 நாள் திட்டமென்பது மிகவும் கடினமான ஓர் செயற்றிட்டமாகும்.

அழுக்கடைந்த தேசத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். எனக்கு



எதிராக சேறு பூசவும் பலர் முயற்சித்து வருகின்றனர்.

ஓர் நடிகை தற்போது எனக்கு எதிராக குற்றம் சுமத்தி வருகின்றார். இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

மாற வேண்டிய அனைத்தும் நல்லாட்சியுடன் மாற்றமடையும் என சுஜீவ சேனசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## 24 மணிநேரத்துக்குள் 175 பேர் கைதாகினர்

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளில் 175 பேரை கடந்த 24 மணி நேரத்துக்குள் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரையிலான 24 மணிநேரத்துக்குள்ளே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-5)

## சொற்பொழிவு

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய ஐந்தாம் பங்குனித்திங்கள் தினமான இன்று யாழ் சின்மயா மிஷன் வதிவிடப் பிரதிநிதி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் ஆன்மீக சொற்பொழிவு ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கண்ணகாம்பிகை அன்னசத்திர மண்டபத்தில் காலை 7மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பகல் 11 மணிக்கு மட்டுவில் தெற்கு ஞானவைரவர் ஆலய பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ-3-29)

## இன்று ஒரு தகவல்

### உதவியால் வரும் சுகம்

பொதுக் காரியங்களுக்குப் பணம் சேர்ப்பதில் மகாத்மா காந்தியடிகள் ரொம்பவும் எச்சரிக்கையாக இருப்பார். அந்த உதவிகளைச் செய்கிறவர்கள், நல்ல காரியத்திற்காகப் பணம் கொடுக்கிறவர்கள் இவர்களின் மனம் நோகாமல் அவர்களிடம் எப்படி வசூல் செய்வது என்கிற கலையைக் காந்தயடிகள் கற்றுக் கொண்டிருந்தார். அதுமாதிரி ஒருத்தர் வாழ்க்கையில் ஒரு சம்பவம்.

பீகாரில் பூகம்பம் வந்த நேரம். அப்போது மிஜாபர்பூர் மகாராஜா என்று ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் 'மஹேஷ்கிரவேசி' அவர் வீட்டிலே விருந்து சாப்பிடுவதற்குக் காந்திஜி போயிருந்தார். தடல்புடலான விருந்து. பரிமாறியது யார் என்றால் ராஜாவுடைய மனைவி. அவர் உணவு பரிமாறிக் கொண்டிருக்கும்போதே அந்த ராணியைக் காந்தியடிகள் பார்த்தார்.

அந்த ராணி உடம்பில் ஏகப்பட்ட நகைகள். கழுத்திலும் கைகளிலும் ஏகப்பட்ட நகைகள். சுமக்க முடியாமல் அந்த நகைகளைப் போட்டுக்கொண்டு உணவு பரிமாறிக் கொண்டிருந்தார் அவர்.

உடனே காந்தியடிகள் மெதுவாக அவரிடம் கேட்டார். ''ஏன் அம்மா இவ்வளவு நகைகளைப் போட்டுச்சுமந்து கொண்டிருக்கிறீர்களே உங்களுக்கு இவை சுமையாக இல்லையா?'' என்று. அதற்கு அந்த அம்மா சொன்னார். "சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால் ராணி என்பதால் நகைகளைப் போட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறதே'' என்று.

''அப்போ ஒன்று செய்யுங்கள். இந்த கனத்தைக் குறைப்பதற்கு நான் ஓர் ஏற்பாடு செய்கிறேன். அதேநேரத்தில் ஒரு சமூகக் கடமையை நிறைவேற்றுகிற மனநிறைவு உங்களுக்குக் கிடைக்கிற மாதிரியும் ஏற்பாடு செய்கிறேன். பீகார் பூகம்பத்தில் நிறைய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு நிறையப் பணம் தேவைப்படுகிறது. நான் அந்தப் பணத்தைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். இப்போ நீங்கள் விரும்பினால் உங்கள் உடம்பில் இருக்கிற நகைகளை எல்லாம் கழற்றிக் கொடுக்கலாம். கொடுத்தால் அது ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படும்'' என்றார் காந்திஜி.

அந்த அம்மா மறு பேச்சு பேசாமல் அந்த நகைகளையெல்லாம் கழற்றிக் காந்தியடிகளுடைய பாதங்களில் வைத்தார். அவர் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. "காந்தியடிகள் கேட்டவுடன் இவ்வளவு நகைகளையும் கழற்றிக் கொடுத்துவிட்டீர்களே. இப்ப நீங்க என்ன நினைக்கிறீர்கள்?'' என்று அவரிடம் கேட்டார்கள்.

அந்தம்மா சொன்னார். "இதனால் என் உடம்பில் உள்ள பாரம் மட்டும் குறைந்ததாக நான் நினைக்கவில்லை. இப்போது என் மனதில் ஓர் அற்புதமான புத்துணர்ச்சி வந்து இருக்கிறது. இந்தப் பணத்தை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தப் போகின்றீர்கள். அதற்கு என்னுடைய நகைகள் எல்லாம் நல்ல காரியத்துக்குப் பயன்படப் போகிறது என்பதை நினைக்கின்ற பொழுது ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. தேவை இல்லாமல் நான் சுமந்து கொண்டு இருந்த சுமை குறைந்துவிட்டது. மனதிலே ஒரு புத்துணர்ச்சி வந்திருக்கிறது'' என்று அந்த அம்மா காந்தியடிகளுக்கு நன்றி சொல்லிவிட்டு அவர் பாதங்களில் விழுந்து வணங்கினார். அன்றிலிருந்து அந்த அம்மா எளிமையான உடைகளைப் போட ஆரம்பித்தார்.

உதவி செய்கிறவர்களைக் காட்டிலும் அந்த உதவியைப் பெற்றுக் கொள்கிறார்களே அவர்களுக்குத்தான் அதிகமான மகிழ்ச்சி கிடைக்கிறது. இங்கே உடல் ரீதியாக ஒரு பெரிய ரசவாதமே நடக்கிறது. அதை அனுபவித்துப் பார்த்தவர்கள் உதவி செய்வதை மேலும் மேலும் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுவார்கள்.

இதுபோல் பணம் வசூல் செய்வதில் காந்தியடிகள் போலவே நம் தமிழ்நாட்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கெட்டிக்காரர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் நிறையப் பணம் தேவைப்படுமே என்று உண்டியல் தயார் செய்து பணம் வசூல் செய்தார் அவர். அதற்குக் காந்தி உண்டியல் என்றே பெயர் வைத்தார். தண்டோரா அடித்துக் கொண்டே உண்டியலுடன் ''வந்தே மாதரம்'' என்று கூவிக்கொண்டே வருவார். அந்தக் காந்தி உண்டியலில் அவர் பணம் சேகரிப்பார். சுதந்திரப் போராட்டச் செலவுக்காகப் பயன்பட வேண்டும் என்பதற்கு அவர் இதையெல்லாம் செய்தார். இவர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். தாய்மாமன் நல்ல வசதியானவர். நல்ல வியாபாரம் இருந்தது. இருந்தாலும் தேசப் பற்றுடன் உண்டியல் ஏந்தி வசூல் செய்கிற ஒரு பெரிய பணியைப் பெருந்தலைவர் செய்தார். இப்படி இருக்கிறவர்கள் எல்லாமே பெரியவர்கள்தான்.

இது மாதிரி ஒருத்தர் விளையாட்டுத் துறையில் ரொம்ப சாதனைகளைப் படைத்தார். அதனால் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு கொடுத்தார்கள். பத்திரிகை நிருபர்கள் எல்லாம் கேட்டார்கள். இந்த ஒரு இலட்ச ரூபாயை என்ன செய்யப் போகிறீர்கள் என்று. அவர் சொன்னார்.

''இதெல்லாம் தர்மத்துக்குப் போகப் போகிறது'' என்று.

''அப்படியா? என்னென்ன தர்மங்கள் எல்லாம் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்கள் பத்திரிகை நிருபர்கள்.

''அட போங்கய்யா என் மனைவியின் பெயர் தர்மம். அவளுக்குத்தான் இதெல்லாம் போகப் போகிறது'' என்றார் அவர்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட ராசி பலன்கள்

## 14.04.2015–13.04.2016



**ஆனி இருபதுக்குமேல் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரும்!**

### மற்றவர்கள் மனம் அறிந்தும் குணமறிந்தும் பேசுவதில் வல்லவர்களாக விளங்கும் மேட இராசி நேயர்களே!

அதிகமாக மன உறுதி படைத்தவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள். காரணம் உங்கள் ராசிநாதன் செவ்வாயாக இருப்பதுதான். செவ்வாயைத் 'தைரியகாரகன்' என்று வர்ணிப்பது வழக்கம்.

பாசம் வைப்பது போல வேஷம் போட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்பவர் கள் பலர் வாழும் உலகத்தில், உண்மையிலேயே பாசம் வைத்துப் பக்குவமாக நடந்து கொள்பவர்கள் நீங்கள்தான். பணப் புழக்கம் குறைவாக இருக்கும் பொழுது மட்டும் நீங்கள் மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

சுக்ரன் உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்திற்கும், 7 ஆம் இடத்திற்கும் அதிபதியாவதால் வாழ்க்கைத் துணையைப் பொறுத்தே உங்களுக்கு வருங்காலம் அமைகின்றது. தனாதிபதியாக சுக்ரன் விளங்குகிறார். தொழில் ஸ்தானாதிபதியாக சனி விளங்குகிறார். இந்த இரண்டு கிரகங்களும் உங்கள ஜாதகத்தில் சாதகமாக இருந்தால் சாதனையாளராக திகழ்வீர்கள். இல்லையேல் சோதனைகளுக்கு ஆட்பட்டு சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலாமல் தவிப்பீர்கள், தத்தளிப்பீர்கள்.

**நல்ல தகவல் நாடி வந்து சேரும் நேரம்!**

ஆண்டின் தொடக்கம் முதல் ஆனி 19 ஆம் திகதி வரை உள்ள கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது நீங்கள் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரப் போகின்றது. அதிலும் குறிப்பாக இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில சந்திரன் உலா வந்து பிறப்பதால் தொழில வளம் பெருகும். தொல்லைகள் அகலும்.

## ஆனி 20 இற்கு மேல் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும்!

எழிலான வாழ்க்கைக்கு இந்த ஆண்டு அடித் தளம் அமைத்துக் கொடுக்கும். அஷ்டமத்துச் சனியின் வக்ர இயக்கம் அற்புதமான பலன்களை அள்ளித் தரும். ஆதரவு கொடுக்க மறுத்தவர்கள்கூட வலிய வந்து உதவிக்கரம் நீட்டுவர்.

அதே நேரத்தில் அந்தச் சனியைப் பார்க்கும் குருவோ உச்சம் பெற்றிருக்கிறார். அந்தக் குருவும் வக்ர இயக்கத்தில் தானே இருக்கிறார் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். வருடம் பிறந்த இரண்டாம் நாளே வக்ர நிவர்த்தியாகி விடுகிறார். எனவே, உச்சம் பெற்ற குரு மிகுந்த பலம் பெற்று, சென்ற ஆண்டில் நடைபெறாத சில காரியங்களைச் சீக்கிரமாக முடித்துக் கொடுக்கும் விதத்தில் சாதகமான பார்வையை வழங்கப் போகின்றது.

எனவே, எண்ணங்கள் நிறைவேறும். இல்லத்தில் அமைதி கிட்டும். பொன்னை வாங்கவேண்டும், பொருளை வாங்க வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். சின்ன விஷயத்தைப் பெரிதாக்கி செயற்பாடுகளில் குற்றம் கண்டுபிடித்து உங்களை விட்டு விலகிய சொந்தங்கள் எல்லாம், 'எங்கள் இல்லத்தில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியை நீங்கள் தான் முன்நின்று நடத்தித் தரவேண்டும்' என்று மன்றாடிக் கேட்கப் போகிறார்கள்.

பகை நட்பாகி பாசம் கூடும் இந்த வருடத்தில் குருவின் பரிபூரண பார்வையும் 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே பாயில் படுத்தவர்கள், நோயில் சிக்கியவர்கள் இனி உற்சாகத்தோடு பணி புரிந்து உடனுக்குடன் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளப் போகிறீர்கள். புதிய கூட்டாளிகள் வந்திணைவர். பயணங்களால் பலன் கிடைக்கும்.

நான்கில் சஞ்சரிக்கும் குருவால் தாயின் உடல்நலம் சீராகும். தகுந்த மருத்துவம் கைகொடுக்கும். சேய் பிறக்கவில்லையே என்ற கவலை அகலும். பணியாளர்களால் ஏற்பட்ட சோர்வு நிலை மாறும். 6 இல் சஞ்சரிக்கும் ராகுவால் வழக்குகளில் திருப்பம் ஏற்படும். கடன் சுமையை தீர்க்க நண்பர் கள் உதவி கிடைக்கும். புனிதப் பயணங் கள் அதிகரிக்கும்.




**குருபார்வையால் கோடி நன்மை கிட்டும்!**

நவக்கிரகங்களில் நல்ல கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குரு ஒன்றுதான். அந்த குரு பகவான் பார்த்தால் கோடி தோஷங் கள் இருந்தாலும் நீங்கி விடும். அப்படிப்பட்ட ஒரு அரிய வாய்ப்பு உங்களுக்கு 5.7.2015 முதல் வருகின்றது. அதாவது ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் அதன் பார்வை உங்கள் ராசியில் ஓராண்டிற்குப் பதியப் போகின்றது. எனவே, துயரங்கள் விலகிச் செல்லும். பாங்கான வாழ்க்கை மலரும். கெட்டவர்களின் சகவாசம் விலகும். கேட்ட மாத்திரத்தில் உதவி கிட்டும். பட்டி தொட்டியெல்லாம் உங்கள புகழ் பரவும். பத்திரப் பதிவுகளில் இருந்த தடை அகலும்.

**அற்புத வாழ்வு தரும் ஐந்தாமிடத்து குரு!**

ஆனி 20 ஆம் திகதி 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் தங்குதடைகள் அகலும். மங்கல ஓசை மனையில் கேட்கும். மற்றவர கள் உங்களைப் புகழும் விதத்தில் நடந்து கொள்வீர்கள். தங்கம், வெள்ளி என்று விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் வீட்டிற்கு வாங்கிச் சேர்க்கப் போகிறீர்கள்.

**ஜென்மத்தை குருதான் பார்த்தால்**
**சிக்கல்கள் விலகி ஓடும்!**
**ஒன்பதை குருதான் பார்த்தால்**
**ஒளிமயம் வாழ்வில் சேரும்!**
**பதினொன்றை குருதான் பார்த்தால்**
**பணப்புழக்கம் அதிகரிக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

எனவே, ஒன்பதாம் இடத்தைப் பார்க்கும் குருவால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு வந்து சேரப் போகின்றது. அலைக்கழித்த நோய்கள் மாறும். அன்னை, தந்தையரால் நன்மை கிட்டும். பூமி விற்பனையால் தன இலாபம் கிடைக்கும்.

11 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் பாடு பட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். பயணங்கள் அதிகரிக்கும். தொழிலில் இலாபம் இரு மடங்காகும். தொலைந்த பொருட்கள் மீண்டும் வந்து சேரும். இளைய சகோதரத்தால் இனிய பலன் கிட்டும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் விருப்பம் கூடும்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் திகதி அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகின்றார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிக்கப் போகின்றார். உங்கள் ராசிக்கு 5 இல் ராகுவும், 11இல் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரம் பிள்ளைகளால் நனமை கிட்டும். பிரச்சினைகள் ஒவ்வொன்றும் நல்ல முடிவிற்கு வரும். விட்டுப்போன வரன்கள் மீண்டும் வந்து ஒட்டிக்கொள்ள வாய்ப்புண்டு. குழந்தை களின் உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சிகள் ஒன்றுகூட கைகூடாதவர்கள், இனி மகிழ்ச்சி அடையும் விதத்தில் வேலை வாய்ப்பு கிடைத்து உதிரி வருமானங்களும் உங்களுக்கு வந்து சேரப் போகிறது.

இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது சேமிப்பு உயரும். திடீர் திடீரென ஆன்மிக செலவுகளுக்கு அள்ளிக் கொடுப்பீர்கள். பூமி யோகம் முதல் புதிய வாகனம் வாங்கும் யோகம் வரை சாமி துணை யோடு சகல காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள்.

**சனியின் சஞ்சார நிலை!**

சனிபகவான் வைகாசி 29 ஆம் திகதி முதல் துலாம் ராசிக்குச் சென்று வக்ரமடைகிறார். 26.7.2015 முதல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு பங்குனி 13 ஆம் திகதி விருச்சிக ராசியில் சனி வக்ரமடைகிறார். இதற்கிடையில் வருடத்தொடக்கத்திலேயே சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். ஆவணி 19 ஆம் திகதி விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியாகி சஞ்சரிக்கிறார். இப்படி வக்ரமாவதும், வக்ர நிவர்த்தியாவதும் இந்த ஆண்டு அடுத்தடுத்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. வக்ர காலத்தில் நன்மைகள் உங்களுக்கு உருவாகும் என்றாலும் தொழில மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியாக சனி விளங்குவதால் தொழில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. எதிர்பார்க்கும் ஊர்களுக்கு இடமாற்றங்கள், இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். ஏழில் சனி சஞ்சரக்கும் பொழுது மட்டும் எச்சரிக்கை தேவை. துலாத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் கூடுதல் நன்மை கிடைக்கும்.

**குருவின் வக்ர காலம்!**

20.12.2015 இல் கன்னி ராசியில் குரு அதிசாரம் பெறும் பொழுதும், 7.2.2016 இல் சிம்ம ராசிக்குள் வக்ரம் பெறும் பொழுதும் வரவும், செலவும் சமமாகவே இருக்கும். உதிரி வருமானங்கள் வந்தா லும் ஒரு சில நிமிடங்களில் செலவாகி விடும். நீண்ட தூரப் பயணங்களை மாற்றி அமைப்பீர்கள். வீட்டுப் பராமரிப்பு செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

ராசிநாதன் செவ்வாயை பலப்படுத்த கந்தப் பெருமானை கவசம் பாடி வழிபட்டு வாருங்கள். சனியின் ஆதிக்கம் இருப்பதால் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும், சனிபகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். மேலும் திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்துச செய்வதன் மூலம் தித்திக்கும் வாழ்க்கை அமையும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

மேட ராசியில் பிறந்த பெண்களே, வருடத்தொடக்கத்தில் செலவுகள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. சுறு சுறுப்பும், சோர்வும் மாறி, மாறி வந்து கொண்டே இருக்கும். கணவன்-மனைவிகளுள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஆனி 20இற்கு மேல் குருப் பெயர்ச்சியின் விளைவாக மிகுந்த யோக பலன்கள் வந்து சேரப்போகிறது. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்குவதற் கான வாய்ப்புகள் எளிதில் கைகூடி வரும். கல்வித்தடை அகலும். தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு உயர்பதவி கிடைக்கும். ஆண்டின் பிற்பாதியில் சேமிப்பு அதிகரிக்கும். செவ்வாய், வெள்ளியில் அம்பிகையை வழிபட்டால் அனைத்து நலன்களும் கிடைக்கும்.

**நாளை இடபம**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமா - காஸ்ட்ரோ கை குலுக்கியதால் அமெ - கியூபா உறவில் புதிய அத்தியாயம்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபர்மா மற்றும் கியூப ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ ஆகியோர் கைகுலுக்கிக் கொண்ட நிகழ்வு, அமெரிக்கா மற்றும் கியூபா நாடுகளுக்கிடையேயான உறவில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் கடந்த வெள்ளிக் கிழமை முதல் அமெரிக்க உச்சி மாநாடு நடைபெற்று வருகிறது. இதன் தொடக்க விழாவில், ஒபாமாவும் காஸ்ட்ரோவும் ஊடகங்கள் முன்னிலையில் கைகுலுக்கிக் கொண்டனர்.

பல காலமாகவே அமெரிக்கா மற்றும் கியூபாவுக்கு இடையில் விரிசல் இருந்து வருகிறது. இந்நிலையில், இரு நாட்டு ஜனாதிபதிகளும் கைகுலுக்கிக் கொண்டனர், இரு நாட்டு உறவில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

இரு நாடுகளின் உறவை மேம்படுத்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக வோஷிங்டனில் கியூபாவும், ஹவானாவில் அமெரிக்காவும் தூதரகங்களைத் திறக்க முயற்சிசெய்து வருகின்றன. ஆனால் இது குறித்து வெள்ளைமாளிகைவெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில், இரு தலைவர்களும் கைகுலுக்கிக் கொண்டது ஒரு சாதாரண நிகழ்வு தான். அவர்கள் இருவரும் பெரிய அளவில் எதுவும்பேசிக்கொள்ள வில்லை என்று கூறப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக, தீவிரவாதத்துக்கு நிதி உதவி செய்யும் நாடுகள் குறித்து அமெரிக்கா தயாரித்துள்ள பட்டியலில் கியூபா இருந்து வருகிறது. சமீபத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் கியூபாவை அந்தப் பட்டியலில் இருந்து நீக்கலாம் என்று வெள்ளை மாளிகைக்குப் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் அதன் மீது இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பட்டியலில் இருந்து, தான் நீக்கப்படுவதுதான் அமெரிக்காவிடமிருந்து கியூபா எதிர்பார்க்கும் முக்கியமான விடயம் அவ்வாறு நீக்கப்பட்டால் அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் குறைந்த அளவிலாவது பொருளாதார பரிவர்த்தனைகளை கியூபா மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 20 தொழிலாளர்கள் சுட்டுப் படுகொலை!

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பாலம் கட்டிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கித் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது ஆயுததாரிகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

வெளியிடங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்பதால், இவர்கள் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தொழிலாளர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

பலுசிஸ்தான் விடுதலை முன்னணி என்ற அமைப்பு இந்த தாக்குதலை தாம் நடத்தியதாக உரிமை கோரியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவமும், அதனால் முன்னெடுக்கப்படும் கட்டுமானத் திட்டங்களுக்காக வேலை செய்வோரும், தமது இலக்கு என்று அந்த பிரிவினைவாத இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலூச் தேசியவாசிகளை இராணுவம் சித்ரவதை செய்வதாகவும், கொல்வதாகவும் பிரிவினைவாதிகள் குற்றம்சாட்டுகின்றனர். நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கவே தாம் நடவடிக்கைகளை முன்னேடுப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-5)




# கிளர்ச்சிப்படையினர் 500 பேர் உயிரிழப்பு

**சவுதி அரேபிய எல்லை பகுதிகளில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் இதுவரை 500 கிளர்ச்சியாளர்கள் பலியாகி உள்ளதாக சவுதி அரசு அறிவித்துள்ளது.**




ஏமனில் நடைபெறும் உள்நாட்டு போர் கடந்த மார்ச் 19 ஆம் திகதி முதல் தீவிரம் அடைந்துள்ளது. அரசுக்கு எதிராக போரிடும் ஹவுத்தி கிளர்ச்சி படையை ஒடுக்க சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் விமானங்கள் மூலம் குண்டு வீச்சு நடத்தி வருகின்றன.

இதனை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள பகுதிகளிலும் சவுதி கூட்டணிப்படைகள் தாக்குதல் நடத்திவருகின்றன.

மார்ச் 26ஆம் திகதி முதல் நேற்று முந்தினம்வரையில் சவுதிக்கும் ஏமனுக்கும் இடைப்பட்ட எல்லை பகுதிகளில் 1200 முறை தாக்குதல் நடந்துள்ளதாகவும், இந்த மோதலின் போது ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் 500 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சவுதி எல்லை பாதுகாப்பு படையினர் மீது கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 3 எல்லை பாதுகாப்பு படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் சவுதி அரசு தெரிவித்துள்ளது. சரியான தருணத்தில் தரைவழிதாக்குதலையும் தொடங்க விருப்பதாகவும் சவுதி அரசு தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# எயிட்ஸ் நோயின் பரவல் அமெரிக்காவில் அதிகரிப்பு

அமெரிக்காவின் இண்டியானா பொலிஸ் மாகாணத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக அந்த மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அந்த மாகாணத்தின் ஒருங்கிணைந்த தகவல்மையம் கடந்த வெள்ளிக்கிழமை கூறியதாவது.

இண்டியானாபொலிஸ் மாகாணத்தில் எய்ட்ஸ் பரவல் திடீரென அதிகரித்துள்ளது.

வியாழக்கிழமை வரை மாகாணத்தில் 95 பேருக்கு எய்ட்ஸ் நோய் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

மேலும், 11 பேருக்கு எய்ட்ஸ் இருப்பதற்கான அறிகுறிகள் முதல் கட்டப் பரிசோதனையில் தென்படுகின்றன என்று ஒருங்கிணைந்த தகவல் மையம் தெரிவித்தது.

போதை ஊசிகளை ஒருவொருக்கொருவர் பகிர்ந்து கொண்டதன் காரணமாகவே, இவ்வளவு வேகமாக எய்ட்ஸ் பரவியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இம்மாதம் 26 ஆம் திகதி சுகாதார நெருக்கடி நாளாக அறிவிக்கப்பட்டு, அன்றைய தினம் பழைய ஊசிகளுக்குப் பதிலாக புதிய ஊசிகளை இலவசமாக வழங்கும் திட்டம் மாகாணமெங்கும் தொடங்கப்படும் என மாகாண ஆளுநர் மைக் பென்ஸ் அறிவித்துள்ளார். (இ-5)

# சிரியாவில் ராணுவத்துடன் பயங்கரவாதிகள் மோதல்

சிரியாவில்ராணுவ விமான தளத்தைக் கைப்பற்ற முயன்ற இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.ஐ.எஸ்.) பயங்கரவாதிகளுக்கும்பாதுகாப்புப் படை வீரர்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் ராணுவ வீரர்கள் உட்பட 35 பேர் உயிரிழந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த சம்பவம் குறித்து சிரியா மனித உரிமைகள்கண்காணிப்பு மையம் தெரிவித்ததாவது,

சுவைதா மாகாணம், கல்கலா அருகில் அமைந்துள்ள ராணுவ விமான தளத்தைக் கைப்பற்ற இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதைத் தொடர்ந்து, பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. இதில் 20 வீரர்கள் உயிரிழந்தனர். பயங்கரவாதிகள் 15 பேர் கொல்லப்பட்டனர்.

ராணுவ விமான தளம் முற்றிலும் அரசுக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்று அந்த மையம் தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளி தூக்கிலிடப்பட்டார்

**(டாக்கா)**

**பங்களாதேஷ் விடுதலையின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்காக குற்றம் சாட்டப்பட்ட ஜமாத்-இ-இஸ் லாமி தலைவரான முகமது கமாருஸமான் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட் டுள்ளார்.**




சிறுபான்மையின மக்களை ஒடுக்கிவந்த பாகிஸ்தானில் இருந்து பிரிந்து பங்களாதேஷம் என்ற தனிநாடு உதயமாவதற்காக 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷத்தில் உச்சக்கட்ட உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இந்தப் போரின் போது துன்புறுத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டனர்.

இந்த படுகொலைகளுக்கு காரணமானவர்கள் மீது டாக்காவின் போர்க்குற்ற நடுவர் நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. பங்களாதேஷத்தின் முக்கிய எதிர்க்கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி தலைவர் முகமது கமாருஸமான் மீதும் போர்க்குற்ற வழக்கு தொடரப்பட்டிருந்தது.

பங்களாதேஷ சுதந்திர போராட்டத்தின் போது வடக்கு ஷெர்பூர் பகுதியில் உள்ள சோஹாபூர் கிராமத்தில் பாகிஸ்தான் இராணுவ உதவியுடன் 164 விவசாயிகளை சுட்டுக் கொன்றதாக முகமது கமாருஸமான் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த கொடூரத்தால் சோஹாபூர் கிராமத்தில் உள்ள பெண்களில் பெரும்பாலானோர் கணவனை இழந்தனர். போர்க்குற்ற விசாரணையின்போது அப்போது நடந்த கொடுமைகளை நீதிமன்றுக்கு வந்த அந்த கணவனை இழந்த பெண்கள் நேரடியாக சாட்சியம் அளித்தனர.

அதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் முகமது கமாருஸமானுக்கு மரண தண்டனை (தூக்கு தண்டனை) விதித்து தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து நீதிமன்றில் மேல் முறையீடு செய்யப்பட்டது. நாஜிக்களைவிட கொடூரமான முறையில் பொதுமக்களை முகமது கமாருஸமான் சித்திர வதை செய்து கொன்றுள்ளார்.

எனவே, மரண தண்டனையை இரத்து செய்ய முடியாது என உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. இதனை அடுத்து கடந்த வெள்ளிக் கிழமை காலை அவர் தூக்கிலிடப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன் தினமிரவு 10.01 மணியளவில் முகமது கமாருஸமான் தூக்கிலிடப பட்டதாக அந்த நாட்டு செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. போர்க்குற்றத்திற்காக மரண தண்டனை பெறும் இரண்டாவது நபர் முகமது கமாருஸமான் ஆவார். (இ-5)


## இந்திய மீனவர்கள் 25பேர் கைதாகினர்

பங்களாதேஷ் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாக, இந்திய மீனவர்கள் 25 பேரை, அந்த நாட்டின கடற்படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து பங்களாதேஷ் பொலி ஸார் தெரிவிக்கையில், பங்களாதேஷின் பகேர்ஹட்ஸ் மோங்குலா துறைமுக பகுதியில், எங்கள் நாட்டு கடற்படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழக்கமான ரோந்துப் பணியை மேற்கொண்டிருந்தனர். அப்போது துறைமுகத்திலிருந்து 90 கடல் மைல்கள் தொலைவில், இந்திய மீனவர்கள் 25 பேர், 2 படகுகளில் மீன்பிடித்துக கொண்டிருந்தது தெரிய வந்தது.

அதையடுத்து, அவர்களை கடற்படையினர் கைது செய்தனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும், மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்களாவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## ஓவியங்களையும் தொட்டு இரசிக்கலாம்




ஸ்பெயினின் தலைநகர் மேட்ரிட்டில் இருக்கும் மியூசியம் ஆஃப் பிராடோ (Museum of Prado), மிகவும் பிரபலமான ஆர்ட் கேலரி. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகிறார்கள். ஓவியக் கண்காட்சியை நாம் பார்த்து ரசிப்பது போலவே, பார்வையற்றோரும் ஓவியங்களை ரசிக்க, கண்காட்சி ஒன்றைத் தொடங்கி உள்ளனர். அதற்குப் பெயர், Touch The Prado. இந்த ஓவியக் கண்காட்சி யில், பிரபலமான ஓவியங்களை 3டி தொழில் நுட்பம் கொண்டு பிரிண்ட் செய்து, காட்சிப்படுத்தியுள்ளனர். பார்வையற்றோர் இந்த ஓவியங்களைத் தொட்டு பார்த்து ரசிக்கலாம்.

இந்த புதிய முறைக்கு, "டிடு" (Didu) என்று பெயர். இந்தக் கண்காட்சி முதல்முறை என்பதால், உலகப் புகழ்பெற்ற ஆறு ஓவியங்கள் மட்டும் இடம்பெற்றுள்ளன. ஜூன் 28 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த ஓவியக் கண்காட்சியை, பார்வையற்றோர் விரும்பி ரசித்து வருகிறார்கள்.

இந்த ஓவியங்களை ரசித்த பார்வை யற்றோர் ஒருவர் கூறுகையில், "உலகப் புகழ்பெற்ற மோனலிசா ஓவியம், கேள்விப்பட்டதோடு சரி. இந்தக் கண்காட்சி மூலம் அந்தக் குறையையும் போக்கி இருக்கிறார்கள்" என்றார். நாமும் கறுப்புக் கண்ணாடி அணிந்துகொண்டு ஓவியங்களைத் தொட்டு ரசிக்க அனுமதியுண்டு. (இ)

## தங்கத்தாலான லம்போகினி கார்




தங்கத்தினால் செய்யப்பட்ட லம்போகினி ஸ்கேல் மொடல் கார் ஒன்றை, ஜேர்மனியை சேர்ந்த பிரபல வடிவமைப்பு நிபுணர் ராபர்ட் வில்ஹெம் குல்பெனும், அவரது நிறுவனமும் சேர்ந்து உருவாக்கியுள்ளது. 500 கிலோ தங்கக் கட்டியில் உருவாக்கப்பட்டுள்ள உலகின் காஸ்ட்லியான கார் இது.

கடந்த 12 ஆண்டுகளாக விலை உயர்ந்த உலோகங்கள் மற்றும் கற்களிலிருந்து சொகுசு கார் மொடல்களை இந்நிறுவனம் தயாரித்து வெளியிட்டு வருகிறது.

லம்போர் கினி அவென்ட்டர் LP 700-4 காரின் மாதிரியாக உருவாக்கப்பட்டுள்ள இந்த தங்கக்கார் 4 கின்னஸ் சாதனைகளை படைக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

500 கிலோ தங்கக்கட்டியை கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கி காரை உருவாக்கியுள்ளனர். கடைசியாக வடிவம் பெற்ற காரில் இருந்த தங்கத்தின் எடை 25 கிலோ மட்டுமே.

கின்னஸ் சாதனை படைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே 500 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த காரை 7.3 மில்லியன் டொலர் விலைக்கு விற்பனை செய்ய இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அதில், 6.50 இலட்சம் டொலரை ஒரு அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் இருக்கைகளின் துணியில் மிகவும் விலையுயர்ந்த 700 கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

உலகின் மிகவும் விலையுயர்ந்த கார் மொடல், குண்டு துளைக்காத கண்ணாடியிலான காட்சிப் பெட்டி, 500 கிலோ தங்கக் கட்டியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரே கார், உலகின் சொகுசான கார் என 4 கின்னஸ் சாதனைகளை படைக்கும் விதத்தில் இந்த கார் உருவாக்கப்பட்டுள்ளது. (இ-5)

## எரிகல்லுக்கு மலாலா பெயர்

### நாஸா விஞ்ஞானி சூட்டினார்



(இஸ்லாமாபாத்)

விண்ணில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள '316201' எரிகல்லுக்கு மலாலாவின் பெயரை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வுகூட வானியல் ஆராய்ச்சி விஞ்ஞானி ஆமி ஸ்மைன்ஸர் சூட்டியுள்ளார்.

பாகிஸ்தானில் தலிபான்களின் கொள்கைகளுக்கு எதிராக, பெண் கல்விக்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்தவர் மலாலா. இதற்காக அவர் கடந்த 2012 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி, பாடசாலை சென்று வரும்போது தலிபான் தீவிரவாதிகளால் சுடப்பட்டார். படுகாயம் அடைந்த அவர் லண்டன் நகரில் சிகிச்சை பெற்று குணம் பெற்றார்.

தற்போது இங்கிலாந்தில் வசித்து வரும் அவருக்கு கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு, இந்தியரான கைலாஷ் சத்யார்த்தியுடன் இணைந்து வழங்கப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை விபத்துக்களிலிருந்து பாதுகாத்தல்

## நாடு தழுவிய ரீதியில் பொலிஸார் முன்னெடுப்பு

(மல்லாவி)

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் ஒன்றிணைந்து "விபத்துக்களற்ற நாடு" எனும் தொனிப்பொருளில் நாடு தழுவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக பொலிஸார் பொதுமக்களை விபத்துக்களில் இருந்து பாது காத்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் செயற்பாடு மாங்குளம், மல்லாவி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களை சேர்ந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இதன் போது துவிச்சக்கரவண்டியில் பயணிப்போருக்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதுடன் வீதி ஒழுங்குகள் தொடர்பில் அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,

நாட்டில் வீதி விபத்துக்களினால் வருடமொன்றிற்கு 2 ஆயிரத்து 500இற்கு மேற்பட்ட நபர்கள் மரணிக்கின்றனர்.

அத்தோடு கடந்த 10 வருடங்களில் 36 ஆயிரத்து 31 வீதி விபத்துக்கள் நடைபெற்றுள்ளன.

இதில் 2 ஆயிரத்து 912 பேர் துவிச்சக்கரவண்டியில் பயணித்த போது வீதி விபத்துக்களை சம்பவித்து மரணமடைந்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டில் மட்டும் துவிச்சக்கரவண்டி வீதி விபத்துக்களின் போது 222 பேர் மரணித்துள்ளனர்.

இவ்வாறு குறித்த விபத்துக்களினால் மரணத்தைத் தழுவிக் கொண்டிருப்பவர்களின் வாழ்க்கையினை பாதுகாத்துக் கொள்வது வீதிப் பாது காப்பு தொடர்பான தேசிய சபை யின் பொறுப்பாகும். எனவே துவிச் சக்கரவண்டியை செலுத்துவோர் வீதி ஒழுங்குவிதிமுறைகளுக்கு அமை வாக பயணத்தினை மேற்கொள்ள வேண்டுமென பொலிஸார் அறி வித்துள்ளனர்.

இதற்கமைய இரவு வேளைகளில் பயணிக்கும் போது துவிச்சக்கரவண்டியில் முன்பகுதியில் வெளிச்சத்தை ஊடறுத்துச் செல்லும் மீன்குமிழ், பின்பகுதியில் மின்குமிழ், ஒளிபட்டுத் தெறிக்கக்கூடிய ஸ்ரிக்கர் ஆகியவற்றை பொருத்தி இருக்க வேண்டும்.

இரவு வேளைகளில் மெல்லிய வர்ண ஆடைகளை அணியவேண்டும்.

குடிபோதையில் துவிச்சகர வண்டிகளை செலுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும்.

கையடக்கத்தொலைபேசி உரையாடிக்கொண்டு துவிச்சக்கரவண்டியை செலுத்துவதை தவிர்க்க வேண்டும்.

துவிச்சக்கரவண்டியில் மணி (Bell) பொருத்தியிருக்க வேண்டும்.

துவிச்சக்கரவண்டியின் இரு சக்கரங்களிலும் வேகத்தடை கட்டைகள் (Brake) பொருத்தி இருத்தல் வேண்டும்.

வீதியில் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் இடப்பக்கமாக பயணிக்க வேண்டும். அதேவேளை குழுவாக, சமாந்தரமாக பயணிப்பதை தவிர்க்க வேண்டும்.

வாகனங்களுக்கு இடையே துவிச்சக்கரவண்டியை வளைந்து, நெளிந்து செலுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

எனவே மேற்படி கூறப்பட்ட வீதி ஒழுங்குமுறைகளுக்கு அமைய துவிச்சக்கரவண்டியைச் செலுத்த வேண்டுமெனவும் மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-15)





தமிழ் சிங்கள புத்தாண்டு நாளை செவ்வாய்க்கிழமை கொண்டாடப் படவுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தில் வியாபார நடவடிக்கைகள் களை கட்டியுள்ளன. வவுனியா நகரில் புடைவைகள், பட்டாசுகள், வாண வெடிகள் என்பவற்றுக்கு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வத்துடன் வாங்கி புத்தாண்டை கொண்டாட தயாராகி வருகின்றனர். இதனால் நகரப் பகுதிகளில் சன நெரிசல் அதிகமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வவுனியா வரியிறுப்பாளர் சங்க பொதுக்கூட்டம்

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் வவுனியா நகரசபைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறும் புதிய நிர்வாகத் தெரிவில் கலந்துகொள்ளுமாறும் சங்கத்தின் செயலாளர் மா.றோய் ஜெயக்குமார் கேட்டுள்ளார். (2-250)




## வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோ.சைக்கிள்களுக்கு காப்புறுதி பதிவை மேற்கொள்க!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் மானிய அடிப்படையில் அரசாங்கத்தினால் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதி அனுமதிப் பத்திரம் குறிப்பிட்ட ஒரு தொகையினருக்கு அக்ரஹாரா இன்சுரன்ஸ் திட்டத்தின் ஊடாக பதிவு நடைபெற்றதுடன் ஏனையோருக்கு இதுவரை பதிவு நடைபெறவில்லை.

இதனால் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர் காப்புறுதிப் பத்திரம் கிடைக்கப்பெறாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

காப்புறுதிப்பத்திரம் கிடைக்கப் பெறாமையால் வரி அனுமதிப்பத்திரம் பெறமுடியாது உள்ளதுடன் மோட்டார் சைக்கிள்களுக்கு இலக்கத் தகடுகளையும் பொருத்த முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை காப்புறுதிப் பத்திரம், இலக்கத்தகடு ஆகியவை இன்று வீதிகளில் பயணிக்கின்ற மோட்டார் சைக்கிள்கள் வீதி போக்குவரத்து பொலிஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்டு மேற்படி ஆவணங்கள் அல்லாதோர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு நாள் மட்டுமே வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதி பதிவுகள் (அக்ரஹாரா) இடம்பெற்றதாக பாதுகாக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இப்பதிவு நடவடிக்கை முழுமையாக நடைபெறவில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கூடிய விரைவில் காப்புறுதி பதிவினை மேற்கொள்ள வேண்டுமென அரசாங்க உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

### யானைகள் நடமாட்டம் அதிகரிப்பு

மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் பட்டப்பகலில் யானைகள் நடமாடுவதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் அச்சத்துடன் செல்லவேண்டியுள்ளதாக தெரி விக்கின்றனர். குறித்த வீதியில் மக்கள் குடியிருப்புக்கு அண்மையாக காட்டுப்பகுதியல் நேற்று யானைகள் நடமாடின. இதனை பலர் வேடிக்கையாகப் பார்த்துச் சென்றனர். எனினும் சைக்கிள், முச்சக்கர வண்டி களில் செல்வோர் பீதியுடன் சென்ற னர். அண்மைக்காலமாக வன்னிப் பகுதிகளில் காட்டு யானைகள் பயன் தரு மரங்களை சேதப்படுத்தி வருகின்றன.

இந்த யானைகள் தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டு காடுகளில் விடப்பட்டவை என்றும், இதன்காரணமாகவே மக்கள் குடியிருப்புக்களுக்குள் பட்டப்பகலில் இவை நுழைந்து பயிர்களை நாசப்படுத்துகின்றன என்றும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (2)

## பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

### புளியம்பொக்கணையில் சம்பவம்

(திருவையாறு)

குடும்பப்பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டாவளை புளியம்பொக்கணை சந்திக்கருமையிலுள்ள கிணற்றிலிருந்து ஒரு குழந்தைக்குத் தாயான சிவபாதம் சிவரூபி (வயது 24) என்ற பிரஸ்தாப பெண்ணே நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டிலிருந்த குறித்த பெண் காணாமற் போனமை தொடர்பில் நேற்று அதிகாலை 3 மணியளவில் தெரியவந்தது.

இதனையடுத்து உறவினர்கள் தேடிய போது குறித்த பெண் வசித்து வருகின்ற வீட்டிற்கு அருகாமையிலுள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்த கிணற்றில் சடலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். (2-273)

## பூநகரி கிராமங்களின் தேவைகள் ஆராயப்பட்டு விரைவில் தீர்க்கப்படும்

### மக்களுடனான சந்திப்புக்களில் சிறிதரன் எம்.பி. உறுதிமொழி

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி கிராமங்களில் வசிக்கின்ற மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை கேட்டறிந்து தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மக்களுடனான சந்திப்பொன்றை அண்மையில் நடத்தியுள்ளார்.

பூநகரியின் வலைப்பாடு கரியாலை, நாகபடுவான், பள்ளிக்குடா, [illegible] கட்டு ஆகிய கிராமங்களின் பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களை சந்தித்து கிராமங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தேவைகள் ஆகியவை பற்றி ஆராய்ந்துள்ளார்.

இந்தச் சந்திப்புக்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பூநகரி பிரதேசத்தின் கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு மக்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் பா.உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவிக்கையில்,

பூநகரி பிரதேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் காணி, வீட்டுத்திட்டம், மின்சாரம், வாழ்வாதாரம், கல்வி போன்றவை தொடர்பாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளும் தேவைகளும் உள்ளதை அறிந்துகொண்டுள்ளேன்.

இந்த விடயங்களுக்கு உரிய அதிகாரிகளுடன் பேசி தீர்வுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என தெரிவித்ததுடன் பல்வேறு உதவிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் உறுதிமொழி வழங்கினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்நிலையை தெரிந்து கொண்டதால் வெற்றியை கைப்பற்றிக் கொண்டோம்

## டோனி பேட்டி




சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஐதராபாத்அணியை சென்னை 45 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி யது. இந்த வெற்றியின் மூலம் சென்னை 2 வெற்றியை பெற்றுள் ளது.

இப்போட்டியின் வெற்றி குறித்து கப்டன் டோனி கூறுகையில், "எங்கள் அணியின் அனைவருடைய பட் டிங் கும் அருமையாக இருந்தது. சென்னையில் வெப்பம் அதிகமாக இருந்தது. இருந்தாலும், பிரண்டன் மக்கலம் பட்டிங் மிகச் சிறப்பாக இருந்தது. எங்களது சொந்த மைதானம் இது என்பதால் இங்குள்ள சூழ்நிலையை நாங்கள் தெரிந்து கொண்ட நிலையில் இந்த வெற்றி முக்கியத்துவம் வாய்ந்தது. இது எங்களுக்கு நல்ல வெற்றி. எங்களுடைய அணி நல்ல நிலைமை யில் உள்ளது. இது நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும்" என்றார்.

தோல்வி குறித்து வோர்னர் கூறும்போது, "பந்து வீச்சாளர்கள் எக்ஸ்ட்ரா பவுன்சரை சிறப்பாக வீசினார்கள். இதில் பாதிக்கு மேலான பந்து வீச்சு பயன் அளிக்கவில்லை. அதை மக்கலம் அவருக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார். மக்கலத்தின் ஆட்டம் உலகத்தரம் வாய்ந்த ஆட்டம். நாங்கள் இந்த சூழ்நிலைக்கு ஏற்ப மாறிக் கொள்ள வேண்டும். பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்படவில்லை என்று நான் கூற மாட்டேன். ஆடுகளம் கடினமானதாகவும், டிரையாகவும் இருந்தது. இதனால் வேகப் பந்து வீச்சு எடுபடாமல் போனது. இந்த தோல்வியை மறந்து பாசிட்டிவ் மனதுடன் அடுத்த போட்டியில் விளையாட பெங்களூர் செல்வோம்" என்றார். (க)

# நீண்டநாள் தோழியை கரம்பிடித்தார் முர்ரே



பிரிட்டன் நாட்டு டென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே, தனது நீண்ட நாள் தோழியான கிம் சியர்சை நேற்று திருமணம் செய்து கொண்டார்.

இந்த திருமணம் முர்ரேவின் சொந்த நகரான டன்பிளேனில் உள்ள கதீட்ரல் தேவாலயத்தில் நடைபெற்றது.

வானமகள் ஆனந்த மழை தூவ ரோல்ஸ் ராய்ஸ் காரில் மணமகள் கிம்சியர்ஸ் கதீட்ரல் தேவாலயத்துக்கு வருகை தந்தார்.

பின்னர் தம்பதியர்கள் இருவரும் "ஐ டூ" என்ற உறுதிமொழி கூறியபோது விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்களின் கரகோஷம் விண்ணை பிளந்தது.

45 நிமிட நேரம் நடைபெற்ற திருமண வைபவத்தை டன்பிளேன் நகரமே கண்டுகளித்தது.

மேலும் திருமணத்திற்கு வந்து தங்களை வாழ்த்திய ரசிகர்களை கண்ட முர்ரேவின் கண்கள் ஆனந்த கண்ணீரை சிந்தியது.

இருவரின் திருமண வரவேற்பு விழா மிகப்பிரமாண்டமான கிரோ மிக்ஸ் ஹவுஸ் ஆடம்பர ஹோட்டலில் நடைபெறவிருக்கிறது. (க)

# ஹென்றியரசர் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே "ஐங்கரன் மீடியா சொலுசன்" நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 7 பேர் பங்குபற்றும் "சுப்பர் 16" காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் இந்தாண்டு மூன்றாவது தடவையாக மோதிக்கொண்ட நிலையில் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை விறுவிறுப்புக்கு குறைவில்லாது ஆட்டம் காணப்பட்டது.

முதற்பாதி ஆட்டத்தில் கோல் பெற இரு அணிகளும் பெரு முயற்சிஎடுத்த போதிலும் கைகூடாத நிலையில் ஆட்டம், கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சம நிலையில் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் எப்படியும் கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கிய இரு அணிகளும் மீண்டும் பெரும் முயற்சியை கோல் பெற எடுத்துக் கொண்ட நிலையில் ஹென்றியரசர் கல்லூரி வீரன் சுமன் தனது அணிக்கான முதலாவது கோலை பெற்றுக் கொண்டார்.

இந் நிலையில் விளையாட்டு சூடு பிடித்துக் கொண்டதுடன் இரு அணிகளும் வேகமாகவும் விளையாடத் தொடங்கிய நிலையில் மீண்டும் ஒரு கோலை ஹென்றியரசர் கல்லூரி வீரன் மது பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் ஹென்றியரசர் கல்லூரி 02:00 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (க)

# மனைவியின் பிறந்த தினத்தை அமர்க்களப்படுத்திய ரஹானே




இந்திய அணியின் இளம் வீரரான ரஹானே சமீபத்திய உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

தற்போது நடைபெற்று வரும் ஐபிஎல் 8ஆவது தொடரில் ராஜஸ்தான் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் தனது மனைவி ராதிகாவின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடியுள்ளார். ரஹானே தனது நீண்ட நாள்தோழியான ராதிகாவை, கடந்த வருடம் செப்டம்பர், 26ம் திகதி மணந்தார். (க)

# தெல்லிப்பழை யூனியனை வென்றது ஜொனியன்ஸ் சிவப்பு அணி



யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கிச் சங்கத்தினால் யாழ். மாவட்ட ஹொக்கி அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டித் தொடரின் ஆட்டமொன்றில் ஜொனியன்ஸ் சிவப்பு அணி வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகியதும் கோல்கள் பெற கடுமையான முயற்சியை மேற்கொண்ட போதிலும்சாத்தியப்படவில்லை. ஆனாலும், இறுதி நிமிடத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலை பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் முக்கியம் வாய்ந்த ஆட்டமாக காணப்பட்ட போதிலும் மீண்டும் மைதானத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கைகள் மேலோங்கி காணப்பட்டது. இந் நிலையில் மேலும் இரண்டு கோல்களை ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் பெற்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் யூனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாட தகுதி பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தை நசுக்குபவர்கள் அதை எப்பொழுதும் சட்டம் ஒழுங்கு என்ற பெயரிலேயே செய்கிறார்கள்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறும் வாய்ப்பு உள்ளதா?

பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் மிகவும் உறுதியாகவுள்ளனர்.

எனினும் பத்தொன்பதாவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதில் குழப்பங்களை உண்டு பண்ணுவதன் மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பலத்தை நிரூபிக்க வேண்டும் என்பது மகிந்த தரப்பின் நிலைப்பாடு. இந்த இழுபறியில் தேசிய அரசு என்பது கலைபட்டுப்போகும் வாய்ப்புள்ளது.

பாராளுமன்றத்தில் பத்தொன்பதாவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேறினால் என்ன? நிறைவேற்றப்படாமல் போனால்என்ன? பாராளுமன்றம் கலைக்கப்படுவது உறுதி.

எனினும் பத்தொன்பதாவது திருத்தச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடக்குமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி–ஐக்கிய தேசியக் கட்சி என்பவை பழையபடி கடும் போட்டியை எதிர்கொள்ளும்.

அதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி என்ற அமைப்புக்குள் மைத்திரி எதிர் மகிந்த என்ற பிரியாடல் நிலைமை தணிகை பெறும் வாய்ப்பும் உள்ளது.

ஆனால் பத்தொன்பதாவது திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் தோல்வியைச் சந்திக்குமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர் ஐக்கிய தேசியக் கட்சி என்பதை விட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரி அணி எதிர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த அணி என்ற மோதல் உச்சம் பெற வாய்ப்புண்டு.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை ஜனாதிபதி மைத்திரி ஒரு சுமுகமான அரசாட்சியை செய்துவிடக்கூடாது என்பதில் உறுதியாகவுள்ளார். இதனை அவர் வெளிப்படையாகக் கூறத் தவறினாலும் உள்ளூர தனது ஆதரவாளர்களூடாக தனது நோக்கை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் பத்தொன்பதாவது திருத்தச்சட்ட மூலத்தை நிறைவேற்றுவது என்பது ஜனாதிபதி மைத்திரிக்கு இருக்கக்கூடிய பெரும் சவாலாகும்.

பத்தொன்பதாவது திருத்தச்சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தர மறுத்தால் அடுத்த பொதுத் தேர்தலில் அவர்கள் வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரி கூறியுள்ளார். இதுகாறும் இப்படியொரு எச்சரிக்கையை ஜனாதிபதி மைத்திரி இதுவரையில் வெளியிடவில்லை.

திறைசேரிப் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுதல் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதால் மைத்திரி கடும் கோபம் கொண்டுள்ளார்.

ஆக, இனிமேலும் இப்படியொரு தோல்வியை பாராளுமன்றம் சந்திக்கக் கூடாது. ஆகையால் பத்தொன்பதாவது திருத்தச்சட்ட மூலத்தை நிறைவேற்ற ஆதரவு தர மறுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்ற எச்சரிக்கையை ஜனாதிபதி மைத்திரி விடுத்துள்ளார்.

மைத்திரி விடுத்த எச்சரிக்கை கால சூழ்நிலை யில் தேவையானதாயினும் பத்தொன்பதாவது திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேறாதபோது நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைவுறும் வாய்ப்புள்ளது.

அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரி அணி–மகிந்த அணி என இரண்டு அணிகள் ஒரு கட்சியில் இருந்து களம் இறங்கும்.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் மகிந்த அணிக்கே அதிக ஆசனம் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் என்பதும் பொதுத் தேர்தல் என்பதும் வேறுபட்டவை.

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு மைத்திரிக்கு இருந்தது. ஆனால் பொதுத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் தனித் தனியாகப் பொதுத் தேர்தலில் போட்டியிடும்.

இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது இரு அணிகளாக பிரிந்து போட்டியிடுமாயின் மைத்திரியின் அணி பலவீனப்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

எனவே ஜனாதிபதி மைத்திரியின் எச்சரிக்கை என்பது பேச்சளவில் இருக்க முடியுமே தவிர நடைமுறையில் அதனை நிறைவேற்ற முற்பட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைவுறுவது தவிர்க்க முடியாததாகும்.

எதுவாயினும் பத்தொன்பதாவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேறக் கூடிய இறுதிச்சந்தர்ப்பம் இது வென்பதால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக பத்தொன்பதாவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதே சாத்தியமானதாக இருக்கும்.

## கைதிகளை பார்வையிட விசேட சந்தர்ப்பம்

புத்தாண்டை முன்னிட்டு இன்றும் நாளையும் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் கைதிகளை பார்வையிடுவதற்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஷ்பகுமார கூறினார்.

கைதிகளுக்கு வெளியில் இருந்து கொண்டுவரப்படும் உணவுகளை வழங்குவதற்கு இரு தினங்களும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் புத்தாண்டை முன்னிட்டு சிறைகளில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார். (செ-11)

## இரத்ததான நிகழ்வு

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தால் புதுவருடத்தை முன்னிட்டு நடத்தப்படும் இரத்ததான நிகழ்வு 11 ஆவது ஆண்டாக நாளை செவ்வாய்க்கிழமை பொற்பதி அறிவாலயக் கட்டடத் தொகுதியில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதுவருடத்தை நல்ல நிகழ்வுடன் ஆரம்பித்தல் எனும் தொனிப்பொருளுடன் 2005 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டு ஒவ்வொரு புதுவருடமும் நடைபெறும் இரத்ததான நிகழ்வில் சுமார் 50 இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் குருதிக்கொடை வழங்கி இவ் உன்னத பணிக்கு உதவி வருகின்றனர். (இ-3)

## வருடப்பிறப்பு உற்சவம்

யாழ். வண். கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மன்மத வருடப் பிறப்பு உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அபிஷேகத்தோடு ஆரம்பமாகி மன்மத வருடப் பிறப்பு நேரமாகிய 12.23 மணிக்கு மூலமூர்த்தி விநாயகப் பெருமானுக்கு விசேட பூசையும் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையுடன் விநாயகப் பெருமான திருவீதி உலாவும் இடம் பெறும். (இ

## விவசாயிகளை முன்னேற்றுவதே அரசின் முக்கிய பணி -மைத்திரி

(கொழும்பு)

தேசிய விவசாயிகளையும் தேசிய கைத்தொழிலாளர்களையும் மேம்படுத்தி, தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே புதிய அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விவசாயிகளை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதை புதிய அரசாங்கம் முக்கிய பணியாகவும் கொள்கையாகவும் கருதி செயற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

200 லட்சம் ரூபா செலவில் பொலன்நறுவை செவனப்பிட்டியவில் நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தை கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, வெலிகந்த பிரதேசத்தில் உள்ள சகல வீதிகளும் இந்த வருடத்திற்குள் நிர்மாணித்து முடிக்கப்படும்.

பொலனறுவை மாவட்டத்தில் உள்ள 6 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 6 பிரதான பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதனிடையே திம்புலாகல பெலேடியாவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை ஜனாதிபதி மக்களின் பயன்பாட்டுக்காக ஆரம்பித்து வைத்தார்.

## ஆணைக்குழு பரிந்துரைகள் ஜனாதிபதி ஏற்பு - பரணகம

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ஜனாதிபதி ஏற்று கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் தலைவர் மெக்ஸ்வல் பரணகம இதனைத் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பான இடைக்கால அறிக்கை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இதன் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோரின்உறவினர்களுக்கு மனவள ஆலோசனையை வழங்க ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் சில முறைபாடுகள் சம்பந்தமான விசாரணைகளுக்காக விசேட அதிகாரிகளை நியமிக்கவும், மற்றும் சில முறைபாடுகள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## உறுப்புரிமை அகற்றப்பட்டமை குறித்து நீதிமன்றத்தை நாடுவேன் -சந்திரசேன

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து உறுப்பினர்களை அகற்றியமை தொடர்பில் நீதிமன்ற த்தை நாடவுள்ளதாக முன்னாள் அமைச் சர் எஸ்.எம்.சந்திரசேன தெரி வித்தார்.

சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்தும் சாலிந்த திசாநாயக்க, ரி.பி. ஏக்கநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன மற்றும் பந்துல குணவர்தன ஆகியோர் அகற்றப்பட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

இந்நிலையில் அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திர சேன, தம்மை நீக்கம் செய்தமை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாக தெரிவித்தார்.

மத்திய குழுவிலிருந்து தாம் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் அகற்றப்பட்டமையால் தமது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனிதன், அறிவின் உயர்வில் ஈசன்



*கடவுள் எனப்படுபவனே மனிதனானான்,*
*கருத்தியங்கி, கருத்துயர்ந்து, கருத்தறிந்தான்;*
*கடவுளாய் அனைத்துமே கண்டுவிட்டான்*
*காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்*
*கடவுள் நிலை யறிந்தவனே அறியாதோர்க்குக்*
*கருத்துணர்ந்த நூல்கள் பல எழுதி வைத்தான்*
*கடவுள் ரகசியமதனை வெளியாய்க் காட்டும்*
*கடமையே சிறந்ததெனக் கொண்டான் ஞானி*

எந்தத் தத்துவத்தைக் கடவுள் என்று சொல்லுகிறோமோ, அதுவே அதன் பரிணாம உச்சத்தில் மனிதனாகவும் இருக்கிறது.

மனிதன் தன் அறிவை இயக்கி, அறிவை உயர்த்தி, அறிவையும் அறிந்துவிட்டான். அவ் விளக்க நிலையில் தானே எல்லமாய் இருக்கும் நிலையையும் கண்டுவிட்டான். காண்பவனே மூலமாகவும் முடிவாகவும் இருக்கும் ஏக நிலையைக் கண்டுகொண்டான்.

இந்த நிலையை அறிந்தவன் அறியாதவர்களுக்கு உணர்த்தும் சிறந்த நோக்கத்தோடும் பொதுவாக அறிவைப் பண்படுத்தும் பொருட்டும் ஆராயத் தூண்டும் பொருட்டும் பல நூல்களும் எழுதினான்.

மூலாதாரத் தத்துவத்தின் இரகசியத்தை அறியா நிலையில்– அறிய வேண்டிய நிலையில்– உள்ள யாவருக்கும் அறிய ஆவன செய்வதைத் தன்னிலை விளக்கம் பெற்ற ஞானிகள் தங்கள் கடமையாகக் கொண்டார்கள். தம்மையறிந்தவுடன் ஞானிகளின் கடமை தீர்ந்துவிடவில்லை.

அரூபமான பேராதார சக்தி நிலையில், ஞாபகத்துடன் பிரபஞ்சத்தை நோக்குகிறான். கோடானு கோடி உருவங்களில், தானே பல்வேறு திறத்தவனாய், வேறுபாடாய், உயிரியக்கம், அறிவியக்கமாய், அறிவியக்க நிலையிலும் பலதரப்பட்டதாய், அறிவு நிலையாய், அறிவு நிலையிலும் பல்வேறு துறைகளாய், அளவினதாய் இருப்பதை உணருகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய- பழைய தேசியத் தலைவர்கள்



**இலங்கையின் புதிய- பழைய தேசியத் தலைவர்கள் எனும் தலைப்பில் சண்டே லீடர் பத்திரிகையில் என். சத்தியமூர்த்தி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

எமது புதிய தேசிய தலைவராக வடக்கு மாகாணசபை முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் முனைப்பான முறையில் அண்மையில் பிரபல்யப்படுத்தப்பட்டதானது தமிழர்கள் விடயத்தில் பெருமளவில் நன்மை தரக்கூடிய வலுவான சந்தர்ப்பத்திற்கு பாதகமான சூழ்நிலையை தற்போது ஏற்படுத்தியது போல் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பிரிவினைவாத சக்திகள் சார்பான இணையத்தளங்கள்கூட அண்மைக்காலத்தில் பெரியளவிலான பாதிப்பினை ஏற்படுத்தியிருக்க முடியாது. தன்னைப் பற்றிய அவர்களது தற்போதைய கருத்துக்களுடனே அநேகமாக தனியாக ஒரு நாடு பற்றிய அவர்களது கொள்கையுடனோ அவர் நிச்சயமாக இணங்காதிருந்தாலுங்கூட ஏதோ ஒரு வழியில் நீதிபதி விக்னேஸ்வரன் என்ற ரீதியில் பெரியதொரு பாதிப்பினையே கூட அது அவருக்கு ஏற்படுத்துவதாயிருக்கக் கூடும.

மென்போக்கும் கனவான தன்மையுங் கொண்டவரான விக்னேஸ்வரன் தனது கருத்துக்கள் மட்டில் குறிப்பாக தமிழர்களது பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றி நேர்மையான முறையில் நேரடியாகவே பேசும் ஒருவரேயாவார். அவர் தீவிர அரசியலில் நுழைந்த முதல் தடவையே ஒரேயடியாக முதலமைச்சராக வருவதற்கு முன்னர் கொடூரமானதும் அழிவு பூர்வமானதுமான போருக்கு முகங்கொடுக்காதவரும் அப்படியான நிலைமைக்கு முகங்கொடுக்கும் தேவையே அற்றவருமான கொழும்பு மேல்தட்டு வர்க்கப் பிரமுகராக அவர்மீது குற்றங் கண்ட அதே பிரிவு மக்கள் இப்போது அவரைப் புகழ ஆரம்பித்திருந்தனர்.

முதலமைச்சராக ஆன தன்பின்னர் கூடுதலாக கடந்த ஒரு வருடமாகவோ அதற்கும் கூடுதலாகவோ பிரிவினைவாத இலட்சியங்களுடன் தன்னை நெருக்கமாக்கிக் கொண்டது போலவும் அதுவே மேலும் மேலும் கூடுதல் வெளிப்படையான ஒன்றாகவும் அவரிடம் தென்பட்டது. போருக்குப் பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விஜயம்மேற்கொண்டு மக்களுக்கு ஆறுதல்கூறி நம்பிக்கையூட்டிய ஒரே தமிழ்த் தலைவருங்கூட அநேகமாக அவராகவேயிருக்கும். அவரது முதலமைச்சர் பதவிக்கான கடமை யுணர்வுடன் அவர் அவ்விதம செயற்பட்டிருந்தாலும் அவரது சகாகளான ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுங்கூட அரசியல் வாதிகள் என்றமட்டில் தமது பணியாகவோ சேவையாகவோ அவரைப்பின்பற்றித் தாமும் அதேவிதம் செயற்பட்டனர். அவர்களது முயற்சிகளனைத்தும் உடனடி அரசியல்நன்மை கருதியதாகவே இருந்ததுடன் அவற்றில் உள்ளார்ந்த ரீதியில் தமிழ் போட்டி அரசியல் முயற்சியே கூடுதலாக இருந்தது.

தமிழ்ச்சமூகம், அரசியல் தலைவர்கள் அல்லது சர்வதேச சமூகத்தின் எந்தவொரு அங்கத்தவரோதானும் விக்னேஸ்வரனை பிரிவினைவாதிகளுடன்நெருக்கமடையச்செய்வதுதான் அவர்களுக்கான ஒரே விருப்பத் தெரிவோ அல்லது தேவையோ என்பதல்ல. ஆனாலும் தமிழ்ப்பிரி வினைவாத கருத்தியல் கோட்பாடுகளில் ஊறித் திளைத்தவர்கள் அதுமட்டில் தமது வழியில் குறுக்கிடும் எந்தவித சந்தர்ப்பங்களையும் தவறவிடுபவர்களல்லர். எனவேமற்றவர்களது வழியை ஏற்றுக்கொள்ளாத ஒரு விக்னேஸ்வரனுக்கு இலங்கை அரசுக்கு இருககககூடிய சிறப்பானதும் பொதுப்படையானதுமான கருத்துக்களுக்கு மாறான கருத்துக்கள் இருக்குமானால் அவரேதான் அவர்களது நேரத்திற்கு பொருத்தமானவர் எனலாம். ஏனையோர் தமக்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆர்.சம்பந்தன் என்றால் தனது நீண்டகால வருட அனுபவம் மற்றும் அரசியல் ஈடுபாடு காரணமாக கிடைக்கக் கூடிய எந்தவிதச் சந்தர்ப்பத்திலும் தன்னைச் சுத்தமான ஓர் நடுநிலைவாத தலைவராக அடையாளப்படுத்துபவராகவே இருக்கிறார். மிகமிக நண்டகாலமாகவே அவருக்கிருக்கும் இந்த இயல்பான தன்மை காரணமாக எத்தகைய தமிழ் கடும்போக்கு வாதியுங்கூட எக்காலத்திலும் அவரை எமக்கான புதிய தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதுடன், 2009 ஆம் ஆண்டு மேமாதத்துடன் போருக்கும் அது சம்பந்தப்பட்ட தமிழீழ விடுதலைப்புலியினருக்கும் ஏற்பட்ட திீர்முடிவுக்குப் பின்னர் இந்நிலை மேலும் கூடுதல் யதார்த்தமாகிற்று. இருப்பினும், அவரே நன்கு பேரம் பேசும் திறமைவாய்ந்தவராகவுமிருக்கிறார். அப்படியிருந்தும் தனது முயற்சிகளில் அவர் பிடிவாதமாயிருந்தாலுங்கூட அவற்றில் அவர் நிலையாக இல்லாத காரணங்களால் அவரால் எதனையும் பெரிதாக செய்துவிட முடிவதில்லை என்பதிலும் பார்க்கச் செய்வதற்கு இயலாதவராகவே இருக்கிறார்.

முதலமைச்சர் என்ற ரீதியில் தனது மக்களது மனத்துயரங்கள் பற்றி விக்னேஸ்வரனால் விவாதம் செய்வது தவிர வேறு எதனையும் செய்ய முடியாதவராகவே இருக் கிறார். தமிழ்த்தலைவரென்ற மட்டில் அவரது மேல் வர்க்க சமூகப்பொருளாதார பின்னணியிலிருந்து அடிக்கடி எழும்பும் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராகத் தனது நம் பகத்தன்மையை முழுமையாக நிலை நிறுத்திக்கொள்ள வேண்டிய நிலை இன்னும் உள்ளது. அதாவது மேல் சாதி மக்கள் (யாழ். வேளாளர் குலமக்கள்) என்றில்லாவிடில் மேல்வர்க்கத்தார் சம்பந்தமான குற்றங்குறைகள் மட்டில் தனது மக்கள் சேவைக்கென்ற கடப்பாடு ரீதியில் தெரிந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக தொடர்ந்து வரப் போகும் முதலமைச்சர்கள் கைக்கொள்வதற்கான வழிமுறைகளை முன்னெடுத்துச்செல்வதற்குரிய நடைமுறைகளை உருவாக்கிக் கொடுப்பதும் அவரது கடமையேயாகும.

விக்னேஸ்வரனது புனர்வாழ்வு சம்பந்தமான அக்கறைகள் நேர்மையானவை என்பதுடன் இராணுவ வெளியேற்றம் பற்றிய அவரது கவலைகள் மக்கள் பாறபட்ட தொடர்சூழ்நிலைகளின் வெளிப்பாடாகவே இருந்ததுடன் அரசயல் தீர்வொன்றுக்கான அவரது பரிந்துரை என்பது தேசிய மற்றும் சர்வதேச ரீதியல் தமிழர் பிரச்சினை எட்டியிருந்த உயர்மட்ட எழுச்சியின் விளைவாக உருவாகியிருந்ததுடன் குறிப்பாக உச்சநீதிமன்ற நீண்ட அனுபவ முதிர்ச்சிக்கு இணையாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் இனப் போர் முடிவுறுவதற்கு முனனரே வேரோடிய உறுதிப் பாட்டில் எழுந்ததாகவுமிருந்தது.

**சிறந்தவிதமாக பேரம பேசும் ஒருவரா? இல்லையா?**

இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு விக்னேஸ்வரனுக்கு அதற்கான அந்தளவு சந்தர்ப்பங்களெதுவும் இதுவரை கிடைத்ததில்லை. இனப்பிரச்சினையின் எந்தவொரு அம்சமும் சம்பந்தப்பட்ட மட்டில் கடுமையான பேசசுவார்த்தை என்பது அவசியமாயிருப்பினும் அதுகண்டிப்பான முறையில் உண்மையான பேச்சுவார்த்தையாகவே தானிருக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் விட்டுக்கொடுப்பது, பெற்றுக் கொள்வது ஆகிய இரண்டுமே அடங்கும். அப்படியில்லையென்றால் அவை பேச்சுவார்த்தைகளாக அமையாது. இந்தவகையில் விக்னேஸ்வரனது செயற்பாடெல்லாம் அநேகமாக வடக்கு மாகாண சபையை மனதிற் கொண்டதாகவும் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கும் அவர்களது மாகாணங்களுக்கும் என்ன செய்யவேண்டும், எதை எதைக் கொடுக்க வேண்டும் என்பதைப் பட்டியலட்டுக்கூறி வலியுறுத்துவதை மட்டுமே உள்ளடக்கியதாகவுமிருக்கிறது.

மத்தியில் அடுத்தடுத்து ஆட்சியிலிருந்த இரு அரச தலைமைத்துவங்களுடன் பல வருடங்களாகவே விக்னேஸ்வரன் பிரச்சினைக்குட்பட்டவராக இருந்து வந்த காரணத்தால் இவரது இப்போக்கினை அவரது கருத்தியல் அலலது தனியாள் ஆளுமைக்கான வேறுபாடுகளாகவோ அல்லது அவரது மனப்படிவு ரீதியான வேறுபாடுகளாகவோதான் காணவேண்டும். அவருடன் அவரது மக்களின் தெரிவான மாகாண சபை நிர்வாகமுங்கூட இதற்கு முன்னர் மத்தியிலிருந்த மகிந்தவினது அரச நிர்வாகத்துடன தமக்கே உரித்தான ஆட்சியுரிமைகளை செயற்படுத்த முடியாத ஒருவித நிர்ப்பந்த நிலையிலேயே இருந்து வந்தது.

ஜனவரி எட்டு பொதுத்தேர்தலுக்குப்பின்னர் ஒரு தடவையாவது அவர்கள் சந்தித்துக்கொள்வதற்கு முன்னரே முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பகிரங்கமான முறையில் பொது இடத்தில்சூடான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒருவரது வார்த்தைகள் அரசியல் கருத்து ரீதியிலும் மற்றையது தனிப்பட்ட ரீதியிலும் அமைந்திருந்தன. விக்னேஸ்வரனை விக்கிரமசிங்க **பொயயன்** என்று கூறியது தமிழ் மக்கள் இதயங்களை ஊடுருவித் தாக்கி அவர்கள் மத்தியில் மனோரீதியான எதிர்ப்பலைகளை நிச்சயம் உருவாக்கியிருக்கும். விக்னேஸ்வரனது அரசியல் ரீதியான கருத்துக்குப் பொருத்தமான பதிலாக எதிர் அரசியல் கருத்தினை முன்வைக்காத சிங்களத் தேசியவாத மேலாண்மைப் போக்கும் தமிழ்மக்களது மன முறிவுக்கான மற்றுமொரு காரணமாகவுமிருக்கலாம்.

இறைமையினடிப்படையில் தெரிந்து கொள்ளப்பட்ட பிரதமர் ஒருவர் அதே விதமாக தெரிந்துகொள்ளப்பட்ட மாகாண முதலமைச்சர் ஒருவரை சந்திக்க மறுப்பதை அனுமதிக்கும் அதிகாரபூர்வ பதிவுகள் எதுவும் இதுவரையில் இல்லை. உள்ளபடி இது இனப்பிரச்சினை சார்ந்த ஒன்றுமட்டுமல்ல. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகதும் நிறைவேற்று அதிகாரமற்ற பிரதமர் ஒருவருக்குமிடையில் அதிகாரத்தைப் பங்கு போடும் விதமான ஒருவித ஆட்சி மாற்றம் உருவாகி வரும் விடயத்தில் வாதிடும்/ போரிடும் இருவரை தலைமையிடத்தில் அரசு கொணடிருத்தல் ஆகாது. அதுவு போருக்கு பின்னர் உள்ள நிலையில் அதற்கான தேவை எதுவுமில்லை. இதுவரையில் ஒரு சிங்களத் தலைவர் என்ற வகையில விக்கிரமசிங்க தமிழர்களது கண்களில் ஏற்புடைய ஒருவராக தெரிந்திருக்கலாம். ஆனால் சுதந்திரத்திலிருந்தே காணப்பட்ட பெரும்பான்மைச் சிங்கள சமூகத் தலைமைத்துவ தவறுகளனைத்தும் ஒருமித்து உருவெடுத்த ஒரே அதிகாரத் தலைமை யாக பிரதமர் உருமாறும் ஓர் நிலைமை எப்படிப்பட்டதாகும். ஒப்பீட்டளவில், ஒரு காலத்தில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறசேனவில் காணப்பட்ட சிங்களக் கடும்போக்கு (?)உருமாறி வடபகுதி தமிழ்மக்களுடனான உறவுகளில் நெருக்கமடைவது என்பது எப்படியான ஓர் நிலைமை. அத்துடன் அவர் பதவியேற்ற பின் இருதடவைகள் வடபகுதிக்கு விஜயங் களும் மேற்கொண்டிருந்தார். ள(தொடரும்)



தமிழில்: யோகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்பஜன் சிங்கின் அதிரடியால் மும்பையின் தோல்வியின் தாக்கம் குறைந்தது

13.4 ஓவர்களில் 59 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தோல்வியை நோக்கி தனது அணியான மும்பை இந்தியன்ஸ் சென்று கொண்டிருந்த சமயம் பந்துவீச்சில் அசத்தலாக செயற்பட்டதைப் போன்று துடுப்பையும் கையிலெடுத்து பந்தை மைதானத்தின் நாலாபுறமும் தூக்கியடித்து தனது அணியின் தோல்வியின் த்ாக்கத்தை மட்டுப்படுத்திய ஹர்பஜன் சிங்கின் ஆட்டத்தால் இறுதியில் மும்பை அணி பஞ்சாப்பிடம் 18 ஓட்டங்களால் போராடித் தோல்வியடைந்தது.



மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 8ஆவது ஐ.பி.எல் தொடரின் 7ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி களத்தடுப்பை தெரிவு செய்ததையடுத்து முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணியின் தொடக்க வீரர்களான முரளி விஜய் 35 ஓட்டங்களும், வீரேந்திர ஷேவாக் 36 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.


அடுத்து களமிறங்கிய மக்ஸ்வெல 6 ஓட்டங்களிலும், மில்லர் 24 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க,

20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 177 ஓட்டங்கள் எடுத்தது.

களத்தில் அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லி ஆட்டமிழக்காமல் அரைசதம் கடந்து 61 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் 177 ரன்களை இலக்காக கொண்டு தனது பேட்டிங்கை தொடங்கிய மும்பை அணிக்கு தொடக்கமே பெரும் அதிர்ச்சியாக அமைந்தது. அந்த அணியின் கப்டன் ரோகித் சர்மா ரன் எதுவும் எடுக்காமல் சந்திப் சர்மா பந்தில் அவுட் ஆனார். பஞ்சாப்பின் நேர்த்தியான பந்துவீச்சை தாக்குபிடிக்க முடியாமல் மும்பை அணியின் விக்கெட்டுகள் சரிய தொடங்கின. ராயுடு 13, பின்ஞ் 8, பொலார்ட் 20 ரன் என முக்கிய வீரர்கள் அனைவரும் அவுட்டாகி மைதானத்தில் திரண்டிருந்த மும்பை ரசிகர்களை ஏமாற்றினார்கள்.

ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் ஹர்பஜன் சிங், களத்தில் இறங்கியது முதலே பஞ்சாப் அணியின் பந்துகளை எல்லை கோட்டுக்கு அனுப்பியபடி இருந்தார். இதனால் சோர்ந்து போயிருந்த ரசிகர்களின் முகத்தில் மீண்டும் சிரிப்பை பார்க்க முடிந்தது. ஹர்




பஜன் சிங் 19 பந்துகளில் அரை சதத்தை கடந்தார். இதுதான் மும்பை அணி வீரரின் ஒருவரின் வேகமான அரைசதமாகும்.

மும்பை வெற்றி பெற கடைசி ஓவரில் 30 ரன்கள் தேவைப்பட்டது. ஆனால் அந்த ஓவரில் 12 ரன்களை மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது. ஹர்பஜன் சிங் 24 பந்துகளில் 64 ரன்கள் குவித்து அந்த ஓவரின் 5-வது பந்தில் ஆட்டம் இழந்தார்.

மும்பைக்கு தோல்வி உறுதி என அனைவரும் நினைத்து கொண்டிருந்த போது ஹர்பஜன் சிங்கின் அதிரடியால் வெற்றிக்கு அருகில் வந்தது மட்டும் அல்லாமல் கௌரவமான ரன்களையும் குவித்தது அந்த அணி.

பஞ்சாப் தரப்பில் ஜோன்சன், அனுரீத் சிங் மற்றும் அஸ்கார் படேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள். 32 பந்தில் 64 ரன்கள் எடுத்த பஞ்சாப் அணியின் கப்டன் பெய்லி ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.




## தீபக் ஹோடாவின் அதிரடி
# டில்லியின் இதயத்தை நொருக்கியது

தீபக் ஹோடாவின் அதிரடித் துடுப்பாட்டம் கைகொடுக்க டெல்லி அணிக்கு எதிரான ஐபிஎல் லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

ஐபிஎல் 8ஆவது தொடரில் நேற்று நடந்த 6ஆவது லீக் ஆட்டத்தில் டெல்லி - ராஜஸ்தான் அணிகள் மோதின.



இதில் நாணயசுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய டெல்லி அணிக்கு மயாங்க் அகர்வால் - ஸ்ரேயாஷ் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது.

ஆரம்பத்திலே அதிரடியை தொடர்ந்த அகர்வால் 21 பந்துகளில் 37 ஓட்டங்கள் (6 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்து ஆட்டமிழந்தார்.

பொறுமையாக விளையாடி வந்த ஸ்ரேயாஷ் பின்னர் அதிரடிக்கு மாறினார். அவர் 30 பந்துகளில் 40 ஓட்டங்கள் (3 பவுண்டரி, 3 சிக்ஸ



ர்கள்) குவித்தார்.

அடுத்து வந்த அதிரடி வீரர் யுவ்ராஜ் 2 சிக்ஸர்களுடன் 17 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்து நடையைக் கட்டினார்.

பின்னர் களமிறங்கிய மத்யூஸ் தன் பங்கிற்கு அதிரடி காட்டினார். இவர் 14 பந்துகளில் 27 ஓட்டங்கள் (3 பவுண்டரி, ஒரு சிக்சர்) குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இவருடன் அணித் தலைவர் டுமினி 44 ஓட்டங்கள் (3 சிக்சர்) குவித்து களத்தில் இருந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் டில்லி அணி 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 184 ஓட்டங்களைக் குவித்தது.

இதைத் தொடர்ந்து 185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமி றங்கிய ராஜஸ்தான் அணிக்கு சஞ்சு சாம்சன் (11) ஏமாற்றம் அளித்தார்.

தொடக்க வீரராக களமிறங்கிய ரஹானே பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அடுத்து வந்த அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் (10), கருண் நாயர் (20) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

சிறப்பாக விளையாடி வந்த ரஹானே (47) இம்ரான் தாஹிர் சுழலில் சிக்கி அரைசதத்தை தவறவிட்டார். பின்னர் வந்த ஸ்ரூவேர்ட பின்னி ஒரு ஓட்டத்தில் நடையை கட்டினார்.

சொதப்பல் துடுப்பாட்டத்தால் ராஜஸ்தான் அணி நெருக்கடியில் சிக்கியது. இதனையடுத்து வந்த தீபக் ஹோடா அதிரடி ஆட்டத்தை காட்டினார். அவர் 25 பந்துகளில் 54 ஓட்டங்கள் (3 பவுண்டரி, 4 சிக்சர்) குவித்து அணிக்கு உத்வேகத்தை வழங்கினார்.

தொடர்ந்து வந்த போல்க்னர் (17) ஆட்டமிழக்க, மோரிஸ் (13), சௌதி (7) அணியை வெற்றி பெறச் செய்தனர்.

இதனால் பரபரப்பான ஆட்டத்தில் ராஜஸ்தான் 3 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாய கனாக ராஜஸ்தான் அணியின் தீபக் ஹோடா தெரிவானார்.

## கடமை நிறைவேற்று அதிபர்களின் கலந்துரையாடல்

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மீசாலை பழைய புகையிரத நிலையம் முன்பாக உள்ள ஏசியன் கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றும் சகலரையும் கலந்துகொள்ளுமாறு வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (ஙு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தி...

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப், தனது பயணம் தொடர்பில இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் பலதரப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்த அவர், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டிருந்தார்.

அவர் தனது பயணத்தின் போதான அவதானிப்புகள் குறித்து நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை அரசாங்கத்தின் விசாரணை ஆணைக குழுக்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை குறைவாகவேவுள்ளது.

பாதிக்கப்பட்டோரின் உண்மை, நீதி, பரிகாரம் போன்ற உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளதால் அரசாங்கத்தின் ஆணைக்குழுக்கள் மீது அவநம்பிக்கை ஏற் பட்டுள்ளது.

சில ஆணைக்குழுக்கள் பரந்தளவிலான பரிந்துரைகளுடன் பயனுள்ள அறிக்கைகளை வெளியிட்டுள்ள போதிலும், அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளன. வேறு சில அறிக்கைகள் பகிரங்கப் படுத்தப்படவில்லை.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு குறுக்கு வழிகள் இல்லை. மனித உரிமை மறல்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றை மறந்து விடும்படி நாம் சாதாரண மாக எதிர்பார்க்க முடியாது என்று மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## மகிந்தவின்...

முறைப்பாடு செய்ய வேண்டுமாயின் என்னால், அதனை செய்ய முடியும்.

எவ்வாறாயினும் கடந்த அரசாங்கத்தின் ஊழல், மோசடிகள், குற்றச் செயல்கள் தொடர்பாக நடத் தப்படும் விசாரணைகள் மகிழ்ச் சியை ஏற்படுத்தவில்லை. அவற்றை மேலும் துரிதப்படுத்த வேண்டும்.

திருடர்கள் தொடர்பாக அரசாங்கம் துரிதமாக செயற் படாமல் இருப்பதே எனக்கு கேள்வியாக உள்ளது. சில அதிகாரிகளின் உதாசீனப் போக்கு இதற்கு காரணம் எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (செ)

## மே 1...

பாளராக நிறுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கும் கட்சிகளும் அமைப்புக்களும் மே 01ஆம் திகதி மே தினக் கூட்டங்களையும் ஊர் வலங்களையும் நடத்துகின்றன.

இவற்றில் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வாசுவிமல கம்மன்பில உட்பட இந்த அரசியல் முன்னணி தனது மேதினக் கூட்டத்தை கிருலப்பனை விளையாட்டுத்திடலில் நடத்தவுள்ளது.

இலங்கையின் இரண்டு முறை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்து பெரும்பான்மை மக்கள் மத்தியில் பிரபலமடைந்தவர் என்றும் அவரது மீள் அரசியல் பிரவேசம் அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வை உருவாக்கும் என்றும் அவ்வூடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (செ)

## இலங்கை...

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி கூடிய விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வாய்ப்புள்ளதாக வாஷிங்டனில் உள்ள தூதரகம் தகவல் அனுப்பியுள்ளது.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூட இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவும் இந்தத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலை அடுத்து ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மட்டு மல்ல.

அரசியலமைப்பு மாற்றங்களுடன் ஏற்பட்ட ஜனநாயகத் தன்மை, நல்லாட்சி, திட்டமிடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல்கள் ஆகியன அமெரிக்க உயர் பிரமுகர்களின் இலங்கைக்கான பயணங்களை ஊக்குவிப்பதில் முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி அடுத்த மாதம இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (செ)

## மோப்ப நாய்க்கு விருது

கொலை, கொள்ளை உட்பட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்காக பெரும் பங்களிப்பை செய்து வரும் கிறேறோ எனப்படும் பொலிஸ் மோப்ப நாய் பொலிஸ திணைக்களத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மோப்ப நாயொன்று விருது வழங்கி கௌரவிக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகும். 500 குற்றச் செயல்கள் தொடர்பாக குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள குறித்த மோப்ப நாய், 12 கொலை சம்பவங்கள் உட்பட 250 சமபவங்கள்தொடர்பாக குற்ற வாளிகளை காட்டிக் கொடுத்துள்ளது. பாணந்துறையில் பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த பொலிஸ் நாய் கௌரவிக்கப்பட்டுளளது. அதற்கான விருதினை அதனை பராமரிக்கும் பொலிஸ கான்ஸ்டபில் சுமிந்த பெற்றுக்கொண்டுள்ளார். (செ)

## ஆணைக்குழுவிலிருந்து...

நாயகம் ஏ சி மாயாதுன்ன நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் இவர்கள் மூவரும் குழுவில் இருந்து விலகியுள்ளனர். தனிப்பட்ட காரணங்களே இதற்காக கூறப்பட்டுள்ளன.

விலகியுள்ள நீதியரசர்களுக்கு பதிலாக மேல்நீதிமன்ற நீதிபதிகளான பீரிதி பத்மன் சூரசேன, டி ஏ மெண்டிஸ் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இளைப்பாறிய கணக்காய்வாளர் நாயகத்துக்கு பதிலாக இளைப்பாறிய மற்றும் ஒரு கணக்காய்வாளர் நாயகம் பி.ஏ.பிரேமதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய இரண்டு உறுப்பினர்களான மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, இளைப்பாறிய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஐயாத்துரை ஞானதாசன் ஆகியோர் தொடர்ந்தும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவுக்கு தற்போது வரை 400 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்




WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101
(C-648)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இரத்தினம்



யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினம் 09.04.2015 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலம்சென்ற சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான நாகலிங்கம் (பண்டாரவளை வர்த்தகர்) இராம்மா அவர்களின் அன்பு மருமகனும் காலம் சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும்,

மாலினி (மல்லாவி), றஞ்சன் (கனடா), விமலினி (மல்லாவி), மனோகரன் (கனடா), நந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலம்சென்றவர்களான சிற்றம்பலம் கிருஸ்ணபிள்ளை, நாகபூசனி (வவுனியா), நிலாம்பிகை நல்லூர், குணபூபதி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றோகினி (கனடா), மதிபாலன் (வலயக்கல்வி அலுவலகம் துணுக்காய்), கார்த்திகா (கனடா), வசிகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும். மரகதவல்லி, இராசலட்சுமி சொரூபராணி, காலம் சென்றவர்களான கோபாலபிள்ளை, பாலசிங்கம் (லதா ஸ்ரோஸ் - காலி), நவரட்ணம் (லதா ஸ்ரோஸ் - காலி) மற்றும் கனகலிங்கம் துரைராசா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிந்துசா (ஆதார வைத்தியசாலை மாங்குளம்) கஜான், சஜித், மதுஷா, கிதுசன், தருண், விஸ்னு, இனியவன், தூயவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.04.2015) திங்கட்கிழமை பி.ப. 12.30 மணியளவில் கனடாவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-652)

இல.343, திருநகர்,
யோகபுரம், மல்லாவி. T.P:0771809915

தகவல் - மகள் : மாலினி, விமலினி
மருமகன் மதிபாலன்

தமிழ் புத்தாண்டை முன்னிட்டும்,
பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக்கவும்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்காகவும் நடைபெறுகிறது.

இக் கற்கை நெறிகள் O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாகவரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
(C-648)

Batches Starts On
15.04.2015@ 9.00am | 20.04.2015@ 9.00am
17.04.2015@ 3.00pm | 18.04.2015@ 8.30am | 21.04.2015@ 3.00pm

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேச கற்கை நெறி
IELTS 2½ Months (Academic & General)
International English Language Testing System
Student/Settlement Visa மூலமாக வெளி நாடு செல்பவர்களுக்கானது
WE GURANTEE BAND 6.0 AND ABOVE
Approved centre for Registering IELTS candidates in Jaffna
ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு கிழமை, வார இறுதி நாட்களில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறும் Free Free Free Free

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422 0714299935

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.